



# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 -1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 5. இதழ் - 3. மே-ஜுன் 2019




R5778

## The Christ perfected by suffering

## கிறிஸ்து பட்ட பாடுகளினாலே பூரணரானார்

*“கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.”* 1 பேதுரு 4 : 13

தேவனுடைய பிள்ளைகளாகவும், நன்மையானதை செய்பவர்களாகவும் ஆனதின் பலனாக, விசேஷமான சோதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆரம்பத்தில் வினோதமாக தோன்றலாம். பாவம் செய்கிறவர்கள் துன்பப்படுவார்கள் என்பதும், பாவத்தை தவிர்க்க விரும்புகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதும் இயற்கையான எதிர்பார்ப்பாக இருக்கும். இது ஒரு இயற்கையான பிரமாணம், இது ஏற்ற காலத்தில், நமது கர்த்தரின் ஆயிர வருட ஆளுகையில் நடைமுறையில் இருக்கும். அங்கே தீமை செய்பவர்கள் துன்பப்படுவார்கள், தொடர்ந்து செய்வதாகக் காணப்பட்டால் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள். ஆனால் நன்மை செய்பவர்கள் நித்திய ஜீவன் மற்றும் நித்திய ஆசீர்வாதத்தின் மூலம் வெகுமானம் பெறுவார்கள்.

நீதியின் அதிபதி இன்னும் ஆளுகையை ஆரம்பிக்காததால் இது இன்னும் உண்மையாகவில்லை. நாம் இன்னும் அந்தகார அதிபதியின் ஆளுகையின் கீழ் இருக்கிறோம். நன்மை செய்பவர்கள் துன்பப்படும்போது, தீமை செய்பவர்கள் அடிக்கடி வெற்றி பெறுகிறார்கள். தாவீது கூறுகிறதாவது: “அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய் பார்க்கிறது; அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது.” (சங்கீதம் 73:7) எனினும் தேவனை சந்தோஷப்படுத்துகிறவர்களுடைய நிலையை அவர் எடுத்தார். அதேபோல் நாமும் செய்கிறோம்.

### நம்மை சோதிப்பதில் தேவனுடைய நோக்கம்

பரிசுத்த பவுல் சுவிசேஷ யுக சபையைப் பற்றி பேசும் போது அவர் சொல்கிறதாவது: “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” (2தீமோ 3:12) இந்த பிரமாணத்திற்கு விதிவிலக்கு யாருமில்லை. இதைப்பற்றிய அறிவும் எதிர்பார்க்குதலும் நீதி என்னும் மார்க்கவசத்தை தரித்துக் கொண்டும், சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை தொடுத்துக் கொண்டும் நம்மை தரித்து நிற்கச் செய்கிறது.

தேவன், தமது பிள்ளைகள் இந்த அனுபவங்களைப் பெறவும், நன்மை செய்து பாடுபடவும் வேண்டும் என்று அனுமதிக்கிறார். தற்காலத்தில் அவர் ஒரு பரிசுத்த கூட்டத்தாரை அழைக்கிறார். இந்த கூட்டத்தார் மேசியாவின் ஆளுகையில் உலகமனைத்தையும் ஆசீர்வதிக்கக் கூடிய ராஜரீக ஆசாரியராயிருப்பார்கள். இந்த வகுப்பாருக்கு தங்களது குணலட்சணத்தை நிரூபிக்கவும் சோதிக்கவும் சோதனைகள் தேவை என்பதை வேதாகமம் நமக்கு விளக்குகிறது.

நீதியின் கொள்கைகளுக்கு நாம் எந்த அளவுக்கு உண்மையாய் இருக்கிறோம் என்பதை பார்க்க தேவன் விரும்புகிறார். எந்த அளவுக்கு நாம் துன்பத்தை அனுபவிக்க தயாராய் இருக்கிறோம்? “ஒவ்வொரு மனிதனும் அவனது விலையை பெற்றிருக்கிறான்” என்கிற ஒரு உலக பழமொழி உண்டு. ஆகையால் சபையில் சிலர் ஓரளவுக்கு சகிப்பார்கள். அதன்பின் பின்வாங்குவார்கள். மற்றவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகவும், இன்னும் மற்றவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகவும் சகிப்பார்கள். கர்த்தருடனான அவர்களது உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்கள் என்பதை நிரூபிக்க எல்லாவற்றையம் விட்டுவிடுகிறவர்களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார் என்று கர்த்தர் அறிவிக்கிறார். நீதியின் பிரமாணங்களாகிய அவரது பிரமாணங்களுக்கும் அவருக்கும் முழுமையாக உண்மையாக இருப்பதே இந்த விசுவாசமாகும்.

### உங்களிடையே பற்றி எரிகிற அக்கினி

சபையை சோதிக்கிற உக்கிரமான சோதனைகளும், தேவனுடைய ஜனங்களிடையே பற்றி எரிகிறவைகள் அனைத்தும் சபையிலிருந்து வரும் என்று பொருள் கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை. அவர்களிடையே பற்றி எரிகிற சோதனைகள் ஒரு அக்கினியாக அவர்களை பரிசுத்தம் பண்ணுகிற வேலையை செய்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட அங்கமும் சகிக்கவேண்டிய ஒரு அனுபவமாக இருக்கிறது. இது ஒரு பொதுவான அனுபவமாக இருக்கும். ஏனெனில் இந்த காரியத்தில் ஒவ்வொருவரும் ஒரு பங்கை பெற வேண்டும். சபையானது முழுவதுமாக ஒரு எதிர்ப்பை

பெற்றிருக்கும் என்பதல்ல, ஒவ்வொரு தனிப்பட்ட அங்கமும் தனித்தனியாக உக்கிரமான சோதனையில் வெளிப்படுத்தப்படுவார்கள். ஆகையால் நம்மிடையே பற்றி எரிக்கிற அக்கினி கடைசி வரை எரியும்.

மற்ற ஜனத்தின் அங்கங்களுக்கு வரக்கூடியதைக் காட்டிலும் இது வேறு வகையானதாக இருக்கிறது. இந்த வேறுபாட்டைக் குறித்த விளக்கம் நமது தலைப்பு வசனத்தில் உள்ளது. "அவருடைய பாடுகளுக்கு நாம் பங்காளிகளானதால்" கிறிஸ்துவின் சரீர அங்கம் ஒவ்வொருவரும் சோதிக்கப்பட வேண்டும் என்பதை அறியும் பொழுது, இந்த அக்கினியில் சில நம்மை தொடும்போது நாம் களி கூறலாம். நாம் கூறுகிறதாவது: "நான் கிறிஸ்துவின் பாடுகளில் ஒரு பங்கை நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். தேவ கிருபையினால் இந்த சோதனைகளில் ஒரு பங்கை நான் பெறுவதில் நான் சந்தோஷப்படுகிறேன். ஏனெனில் எனக்கு அதில் பங்கு இல்லையென்றால், சரீர அங்கங்களில் நானும் ஒருவன் என்பதை எப்படி நான் அறிவேன்?"

## துன்பத்திற்கு பிரதான மூல காரணம்

ஆகையால் இந்த உக்கிரமான சோதனைகள் தேவனால் வருகிறது என்பதை அறிந்து நாம் அனைவரும் சந்தோஷப்படுகிறோம். கர்த்தர் இந்த உக்கிரமான சோதனைகளுக்கு காரணர் என்பதினாலல்ல, அது வழக்கமாக சத்துருவினால் வருகிறது. ஆனால் நாம் நம்மை கர்த்தரின் கைகளில் ஒப்புக் கொடுத்திருக்கிறோம். அவர் நம்மைக் குறித்த அனைத்து காரியங்களையும் அவர் மேற்பார்வையிடுகிறார் என்று நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். ஆகையால் நமக்கு எது வந்தாலும் அது நமது பிதாவின் அனுமதியின் பேரில் நமது நன்மைக்காக வருகிறது என்பதை நாம் நிச்சயிக்கிறோம். ஆகையால் இது தேவனருளால் நமக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தால் அது நன்மையாக இருக்கிறது. நாம் எத்தனை முறை நமக்கு தேவையான உதவிக்காக கிருபாசனத்தண்டைக்கு போகிறோம் என்பது பெரிய காரியம் அல்ல.

கிறிஸ்துவுக்கு (இயேசு + சபை) மகா உயர்த்துதலை, மகா கனம், மகிமை, சாகாமையை தருவதற்கு தேவன் உத்தேசித்திருக்கிறார் என்று நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகையால் இந்த சரீரமானது எப்பொழுது பூரணமடையும் என்பதையும், நமது தலையானவரின் மகிமையில் எப்பொழுது பங்கு பெறுவோம் என்பதையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மகிமை வெளிப்படுத்தப்படும்போது நாம் பெரிய சந்தோஷத்தில் களிகூறுவோம்! இந்த சோதனை நமக்கு பல்வேறு இடத்திலிருந்து வருகிறது. நமது வசனத்தில் சபைக்கான ஒரு சோதனையைப் போல பேசப்படுகிறது. ஆனால் இந்த ஒரு சோதனை பல்வேறு அனுபவங்களை கொண்டதாக இருக்கிறது. இந்த துன்பங்களும் சோதனைகளும் ஒரே சமயத்தில் வந்தால் அது நமக்கு மிகவும் கடுமையானதாக இருக்கும். ஆகையால் கர்த்தர் அந்த அக்கினியிலிருந்து கொஞ்சகாலம் நம்மை விடுவிக்கிறார். "நமது உருவம் இன்னதென்று அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார்." (சங்கீதம் 103:14)

## தற்கால வதைகள் மிகவும் மென்மையாக்கப்பட்டிருக்கிறது

பிதாவானவர் சோதனை காலங்களுக்கிடையே கொஞ்ச காலம் இளைப்பாறுதலை ஏற்பாடு செய்திருக்கிறார். ஆகையால் அடுத்த சோதனை வரும்போது, நாம் கொஞ்சம் அதிக பலமுள்ளவர்களாகவும், அதன் மூலம் பலன்பெற அதிகமாக தாயாராயிருப்போம். இந்த சோதனைகளில் சில சத்துருவானவனிடமிருந்து வருகிறது. சபைக்கு வேறு யாரிடமிருந்தும் சோதனைகள் வந்திருக்க முடியாது என்பது வெளிப்படையாக தெரிகிறது. கர்த்தரிடத்தில் வெளிப்படுத்தப்பட்ட பேயைப் போன்ற மனோபாவத்தையும், அவருடைய பாடுகளில் பிரதிபலித்ததையும் நினைத்துப்பாருங்கள். அவருக்கு விரோதமாக வெளிப்படுத்தப்பட்ட இப்படிப்பட்ட தீய நோக்குடைய ஆவியை மனுக்குலம் எந்த ஒரு சாதாரண நிலைமையிலும் பெற்றிருந்திருக்க முடியும் என்று நம்மால் நினைத்துப் பார்க்கவே முடியாது. நாக்குகளை வெட்டுவது, அவர்களது சரீரங்களை சித்திரவதை செய்வது, கசப்பான வார்த்தைகளை பேசுவது போன்ற தீமையான காரியங்களை பரிசுத்தவான்களுக்கு விரோதமாக பிசாசே செய்யக்கூடியவனாக இருந்தான்.

முற்காலத்தைக் காட்டிலும் தற்காலத்தில் கடைசியாக சொல்லப்பட்ட துன்பங்களையே அனுபவித்து வருகிறோம். ஏனெனில் உலகமானது–சாதாரண மனிதன்–இருண்ட காலங்களில் நடைபெற்ற காரியங்களை அனுமதிக்காது. ஆனால் விரோதம், பகை போன்ற தீமையான உணர்வுகள் அங்கே இருக்கின்றன. அப்போஸ்தலர் கூறுவதைப் போல, நாவும் நெருப்புதான். அது அநீதி நிறைந்த உலகம். நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும் இருக்கிறது. (யாக்கோ 3:6) ஆகையால் தற்காலத்தில் நாவும், பேனாவும் தீமையின் ஆயுதங்களாக அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

தீமைகளை பேசுவதிலும், தீமைகளானவைகளை நம்புவதிலும் அவர்கள் காணாததை பேசுவதிலும் எப்படி உலகமானது விருப்பங்கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் கவனித்திருக்கிறோம். இவை எல்லாம் ஏன் இப்படி நடக்கிறது என்றால் அவர்கள் சத்துருவானவனால் ஆக்கிரமிக்கப்பட்டும், சூழப்பட்டும் இருக்கிறார்கள். ஆனால் கடந்த கால நமது சகோதரர்களைக் காட்டிலும் நாம் நாகரீகமடைந்த நாட்களில் வாழ்கிறோம். இந்த கெட்ட காரியங்களை செய்யக்கூடிய தனிப்பட்ட மனிதர்கள், தேவனுடைய பிள்ளைகளை அவதூறாய் பேசுகிறவர்களும், தூற்றுகிறவர்களும் தீய எண்ணமுள்ள செல்வாக்கிற்கு கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் நாம் அவர்களை பதிலுக்கு தவறாக பேசவும் அவர்களுக்கு எதிராக கெடுதல் செய்யவும் நாம் தூண்டப்படுகிறோம். இப்படிப்பட்ட மனோபாவம் அதாவது தீமையை பேச எழும்போது, நாம் அதை தடுக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். நமது பழைய சுபாவங்களை இக்காலத்தின் அக்கினியைக் கொண்டு எரிக்க

அனுமதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும் இந்த அக்கினியானது நம்மை சுத்திகரிக்கும் வேலையை செய்கிறது. இதை சரியானபடி பெற்றுக் கொண்டால், அது நம்மை பரலோக ராஜ்யத்தை சந்திக்க தகுதியுள்ளவர்களாக்குகிறது.

## சோதனைக்கான இரண்டாவதான காரணம்

இந்த சோதனைகள் சத்துருவானவனால் மாத்திரமல்ல, மற்றவர்களின் அபூரணத்தினாலும் பலவீனத்தினாலும் வருகின்றன. மேலும் இது சகோதரர்களிடமிருந்து வருகிறது என்பது மிகவும் தாங்கக் கூடாததாக இருக்கிறது. "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவிசுவாசிகளின் மனதை குருடாக்கியிருக்கிறான்" என்பதை நாம் அறிவோம். தேவனுக்கு உண்மையுள்ளவர்கள் என்று தங்களை வெளிப்படுத்திக் கொண்டவர்கள் அல்லது கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொண்டவர்கள் அவர்களில் பிரிஸ்பட்டேரியனாகவோ அல்லது எபிகோபல் சபையினராகவோ அல்லது பேப்டிஸ்ட் அல்லது காங்கிரிகேஷனிலிஸ்ட்டாகவோ, அல்லது வேதமாணவராகவோ இவர்களில் யாராவது துன்பப்படுத்துகிற ஆவியை உடையவர்களாகக் கண்டால், நாம் மிகவும் ஊக்கம் குன்றியவர்களாகி அவர்களுக்கு சரியான இரக்கம் காண்பிப்பதில் குறைந்தவர்களாகவும் இருப்போம்.

தேவனுடைய அனுமதியில்லாமல் நமக்கு எதுவும் நடக்காது என்று நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் மெதடிஸ்ட் அல்லது பிரிஸ்பட்டேரியன் அல்லது வேத மாணவரின் மூலமாக சோதனைகளை பெறவில்லையென்றால், வேறு எங்கிருந்தாவது நாம் சோதனைகளை பெறுவோம். வளர்ச்சி தேவைப்படுகிற நமது குணலட்சணங்கள் பலம் பெறுவதற்கும், நமது கசடுகளை எரிப்பதற்கும் இந்த சோதனை தேவைப்படுகிறது. அவைகளெல்லாம் நமக்கும் "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை" உண்டாக்குவதற்கு கிரியை செய்கிறது என்று அறிந்து, இவைகளை பொறுமையுடன் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இவைகளை விட்டு, தேவனுடைய மகா நோக்கத்தை கண்டுணர வேண்டும். மகிமையின் மகா ஆலயத்துக்கு நம்மை தயார்படுத்துவதற்கு, நம்மை செதுக்கவும் மெருகேற்றவும் தேவன் செய்கிற முறை இது என்று நாம் பிரதிபலிக்கவேண்டும். இதை நாம் நினைக்கும் போது, இந்த உக்கிரமான சோதனைகளின் மூலம் ஒரு ஆசீர்வாதத்தை பெறுவோம் என்று உணர்ந்து இதை சகிப்புத்தன்மையுடனும் பொறுமையுடனும் நோக்க வேண்டும்.

*"முள்ளுள்ள பாதை வழியாக எனது சோர்ந்த*
*கால்களை அவர் நடத்துகிறார்;*
*கண்ணீர் பாதை வழியாக நான் போகிறேன்,*
*ஆனால் அது இன்பமானது*
*எனது தேவன், எனது வழிகாட்டி,*
*என்னுடன் நெருக்கமாக இருக்கிறார் என்பதை அறிவேன்*
*அவர் என்னை வழிநடத்துகிறார்*
*முழு திருப்தியுடன் நடக்கிறேன்."*

இப்படியாக தேவனுடைய பிள்ளைகளாக நாம் மகிமைக்கு செல்ல கற்றுக் கொள்கிறோம். நமக்குள்ளே, நமக்காக அவர் செய்திருக்கிற அனைத்து காரியங்களிலும் நாம் மகிமையடைவோம். இயற்கையிலேயே சிறியதாக இருக்கக் கூடியவைகள் மகா ஆபத்திலும், துன்பத்திலும் மகிமையடைவார்கள். இதிலும் கூட நாம் மகிமையடைவோம். இவைகளில் நாம் களிகூறுவோம். ஆபத்தையும் துன்பத்தையும் நாம் அனுபவிக்கிறதினாலல்ல, இவைகள் நமது குணலட்சணங்களை தேவனுக்கு பிரியமானதாக மாற்ற கிரியை செய்கின்றன என்பதினால் ஆகும். மகா ஆபத்தில் நாம் அதிகமாக பங்கு பெறாதபடி நமக்கு தேவையானதை மட்டும் பெறும்படி கர்த்தர் பார்த்துக் கொள்வார்.

மகா உபத்திரவம் என்பது தீவிரமான துன்பத்தைக் குறிக்கிறது. துன்பத்தையும் அதனால் பெறக்கூடிய தீவிரமான அனுபவங்களையும் குறிக்கிறது. துன்பத்தில் கொஞ்ச காலம் விழுந்து பிறகு அதிலிருந்து விடுபடுவோம் என்று அதன் பொருள் அல்ல. அது மிகவும் கடுமையான மற்றும் தொடர்ச்சியான துன்பத்தைக் குறிக்கிறது. ஏன் இந்த துன்பங்கள் நமக்கு வந்திருக்கிறது என்பதை நாம் சில சமயங்களில் அறிந்து கொள்ள இயலாது. அவை வியாதி, மரணம், அல்லது பொருளாதார கஷ்டம், அறிந்து கொள்ள முடியாத நமது பெருமை மற்றும் சுயநல அன்பு ஆகிய வடிவங்களில் வரலாம்; அல்லது இந்த துன்பங்கள் சேர்ந்து வரலாம். இது எந்த ஒரு வடிவில் வந்தாலும், அது மகா உபத்திரவம் தான். இந்த எல்லா சோதனைகளிலும் கர்த்தர் நமக்கு நன்மையை ஏற்படுத்துவார் என்பதை நாம் உணர வேண்டியவர்களாயிருக்கிறோம்.

உலகமானது ஒரு வகையான துன்புறுத்தல்களைப் பெற்றிருக்கிறது. தொழிலில் உள்ள ஜனங்கள் சில சமயங்களில் ஒருவரையொருவர் துன்புறுத்திக் கொள்வார்கள். சில சமயங்களில் துன்புறுத்துதல் அரசியல் மூலமாக இருக்கிறது. நாம் குற்றம் பண்ணாமல் துன்பப்படுதலில் நாம் களிகூற வேண்டும் என்று கர்த்தர் சபைக்கு சுட்டிக்காட்டுகிறார். "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமல் இருக்கவேண்டும்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (1 பேதுரு 4:14-16) "இருளானது வெளிச்சத்தை வெறுப்பதினாலும்" சத்தியத்தை பழிப்பதினாலும் அவன் இந்த துன்பத்தை பெறுகிறான். இது இயேசுவின் காலத்திலிருந்து இப்படியாக இருந்து வருகிறது.

## துன்புறுத்தப்படுவதிலிருந்து அடைகிற ஆசீர்வாதம்

இப்படிப்பட்ட எந்த அனுபவத்திலும் நாம் ஒத்துப் போகமாட்டோம் என்று நம்மால் கூறமுடியுமா? இல்லை; நாம் எல்லாவற்றையும் கர்த்தரிடம் வாக்களித்திருக்கிறோம். நமக்கு எல்லாம் நன்மைக்கேதுவாய் நடக்கிறது என்ற தேவனுடைய உறுதியில் நமது விசுவாசத்தை அறிந்து முற்றிலுமாக நாம் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அது

எப்படிப்பட்ட துன்பமாக இருந்தாலும், அதை சரியானபடி அப்பியாசப்படுத்தினால் அது நமக்கு பொறுமையை கொண்டு வரும். கர்த்தரின் ஜனங்களில் சிலர் பொறுமையை நன்கு வளர்த்திருப்பதினால், இந்த அனுபவங்களில் அநேகம் தேவைப்படாது. நமக்கு எது தேவையோ, அதை நாம் விரும்ப வேண்டும்.

தங்கள் குணலட்சணங்களை சோதித்தறிந்து, பொறுமையில் குறைவுபட்டிருப்பின் தீர்மானித்த ஒரு சகோதரரின் வாழ்க்கையை கர்த்தரிடம் தனக்கு மீண்டும் ஞாபகப்படுத்துகிறோம். அவர் கர்த்தரிடம் தனக்கு பொறுமையை தரும்படி ஊக்கமாக ஜெபித்தார். அவர் ஜெபித்துக் கொண்டே வந்தார்; எந்த அளவுக்கு ஜெபித்தாரோ அந்த அளவுக்கு அதிக துன்பங்களை, பொறுமைக்கான பெரும் சோதனைகளை அவர் பெற்றதாக நாம் காண்கிறோம். அவருடைய ஜெபத்திற்கு பதிலாக அது அவருக்கு நடந்தது. ஏனெனில் இதுவே பொறுமையை பெறுவதற்கான வழியாக இருக்கிறது. அவர் காரியங்களை சரியாக பார்க்க ஆரம்பித்தபொழுது, அது அவரை உற்சாகப்படுத்தி பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த ஆவியின் கிருபையை தனது குணலட்சணங்களில் அபிவிருத்தி செய்ய தேவையான அனுபவங்களை கொடுத்து தனது ஜெபத்திற்கு கர்த்தர் பதிலளிக்கிறார் என்பதை அவர் கண்டார்.

“உபத்திரவம், பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது.” நாம் பொறுமையை முதலாவது பெறுகிறோம் என்றும் பிறகு அனுபவத்தைப் பெறுகிறோம் என்றும், அதன் பிறகு நமது அனைத்து நம்பிக்கைகளையும் பெறுகிறோம் என்றும் இதற்கு பொருளல்ல; எல்லாம் ஒரே சமயத்தில் அபிவிருத்தி அடைகிறது. நாம் தைரியத்தைப் பெற்று, கர்த்தரை சந்தோஷப்படுத்த விரும்புகிறோம். நாம் அவருடைய பிள்ளையாக இருப்பதினால், நாம் வெட்கப்பட்டுப் போவதில்லை. நாம் ஏன் வெட்கப்பட்டு போவதில்லை என்றால், இந்த நம்பிக்கையுடன் தேவனுடைய அன்பை நாம் உணருகிறோம். மேலும், “நான் உபத்திரவத்தை பெற்றதினால், நான் அதிக நம்பிக்கையையும், பொறுமையையும் பெற்றிருக்கிறேன். இந்த உபத்திரவங்களில், ஆவியின் கனிகளில் பலன்களை நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன்” என்று நாம் சொல்லக்கூடும். பரிசுத்த ஆவியின் கனிகளை அபிவிருத்தி செய்கிற அனுபவங்களை பெறாதவர்கள் இராஜ்யத்தில் ஒரு இடத்தை அடையவே முடியாது.

சோதனைகள் மூலமாக மட்டுமே நாம் பொறுமையை பெற முடியும், தேவைகள் மூலமாக மட்டுமே விசுவாசத்தை அபிவிருத்தி செய்ய முடியும். நமது எதிர்கால வேலைக்கு நம்மை தயார்படுத்துவது அவசியமாயிருக்கிறது. வேதனைப்படுகிற சிருஷ்டியின் சோதனைகள், துன்பங்கள் மற்றும் பலவீனங்களின் உணர்வுகளுடன் இந்த அனுபவங்கள் நம்மை தொடும்போதுதான் இவைகளை நாம் பெறமுடியும். இந்த வேதனைப்படுகிற சிருஷ்டிகளுக்கு, நாம் சிங்காசனத்தை அடையும் போது, நாம் ஊழியர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இருப்போம். நமக்கு தற்கால அனுபவங்களின் பாடம் தீமையை எதிர்ப்பதற்காகவே இருக்கிறது; தீமையுடன் அல்ல, நன்மையுடன் ஆகும். “நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.” (ரோமர் 12:21)

## R5779 Elisha’s Restitution Ministry

## இழந்ததை திரும்ப கொடுக்கும் எலிசாவின் ஊழியம்

2 ராஜாக்கள் 4, 5

*எலியாவுக்கு பிறகு எலிசா வருகிறார் – இதன் நிழலான கருத்து – நீரூற்றை நல்லதாக மாற்றுகிறார் – இளம் வாலிபர்களுடன் சண்டையிடுகிறார் – அவர்களுக்கெதிராக தீர்ப்பளிக்கிறார் – அவர்களுக்கான தண்டனை – ஒரு விதவையின் விசுவாசத்திற்கான பரிசு அளிக்கிறார் – படைத்தலைவனான நாகமானின் குஷ்டரோகத்தை சொஸ்தப்படுத்துகிறார் – நாகமானின் எதிர்காலத்தைக் குறித்து அவரிடம் ஆலோசனை கேட்கப்படுகிறது.*

*“நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்.” யாத்திராகமம் 15:26*

தகப்பனாகிய ஆதாமின் பாவத்தினாலும் அவரது சந்ததியினரின் பாவத்தினாலும், பாவத்திற்கெதிரான தேவனுடைய தீர்ப்பினாலும் ஆறாயிரம் வருடங்களுக்கு மேலாக பூமியானது தெய்வீக தண்டனையின் கீழ் இருந்திருக்கிறது. இந்த காரணத்தினாலேயே அப்போஸ்தலர், நமது உலகமானது “பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகைக்கு” கீழாக இருந்து வந்திருக்கிறது. (ரோமர் 5:14–19) இன்னும் இருக்கிறது; ஏனெனில் சாபம், அல்லது தண்டனை இன்னும் நீக்கப்படவில்லை. ஒரு மேன்மையான நாள் விடிய இருக்கிறது என்ற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களில் வேதாகமம் முழுமையும் நிரம்பியிருக்கிறதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! இந்த மகிமையான யுகம் மேசியாவின் ராஜ்யத்தால் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்காகத்தான் இயேசு, “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று ஜெபிக்கும்படி தமது ஜனங்களுக்கு கற்றுக் கொடுத்தார். பிறகு ஒரு மகிமையான மாற்றம் உலகிற்கு வரும். சாத்தான் ஒரு ஆயிரம் வருஷமளவும் கட்டப்படுவான். பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகை நீக்கப்பட்டு, நீதி மற்றும் ஜீவனின் ஆளுகை ஆரம்பிக்கும்.

இந்த ஆளுகை ஆயிரம் வருடம் இருக்கும். இதன் பலனால், தகப்பனாகிய ஆதாமின் பாவம் முதலானவைகளால் வந்த தண்டனைகளாகிய துன்பம் மற்றும் வியாதிகளிலிருந்தும் மனுக்குலம் விடுவிக்கப்படும். மேசியாவின் ராஜ்யம் துவக்கப்பட்டதிலிருந்தே தேவனுடைய ஆசீர்வாதம் அவர் மூலமாக உலகிற்குவர ஆரம்பிக்கும். அதற்கேற்றாற்போல,

சாபமும் நீங்கிப் போகும்; ஆனால் ஆசீர்வாதம் முழுமையாக இருக்காது; சாபமும் முழுமையாக ஆயிர வருடயுகம் முடியும் வரை நீங்கிப் போகாது. இது மகா பெரிய வேலையாக இருக்கும். முடிவாக துக்கமில்லை. அலறுதலுமில்லை, மரணமுமில்லை; ஏனெனில் பாவமும் மரணமும் நீங்கிப் போகும், அவர் ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக இருந்து எல்லாவற்றையும் புதிதாக்குவார் என்பதே இயேசுவின் வாக்குத்தத்தமாக இருக்கிறது. (வெளி 21: 4,5; 19:16; 1 கொரி 15:26,54)

### எலிசாவின் ஊழியம் இழந்ததை திரும்பக் கொடுக்கும் ஆசீர்வாதங்களுக்கு ஒரு முன்னடையாளம்

முந்தைய பாடத்தில் எலியாவின் வாழ்க்கை, மாம்சத்தில் இருந்து கடைசியாக மகிமையடைகிற சபையின் அனுபவங்களுக்கு நிழலாக இருக்கிறது என்பதை வேதமாணவர்கள் புரிந்து கொள்ளும்படி நாம் குறிப்பிட்டோம். எலியாவின் சால்வை எலிசாவின் மேல் விழுந்தது. இது கர்த்தருடைய பிரதிநிதித்துவத்தையும் வல்லமையையும் அதிகாரத்தையும் குறிக்கிறது.

ஆகையால் எலியாவுடன் இருந்த எலிசா ஒரு வகுப்பாரை முன் குறிக்கிறார் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் அவர் இரண்டு வகுப்பாரை முன் குறிக்கிறார் என்று நாங்கள் கருதுகிறோம். முதலாவது இப்போது எலியா வகுப்பாரோடு கூட இருக்கிறவர்கள். எலிசா எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு எலிசா யோர்தானைக் கடந்த பிறகு, ஆயிர வருட யுகத்தில் இழந்ததை திரும்பக் கொடுக்கிற ஆசீர்வாதங்களை விநியோகிக்கப் போகிற ஒரு வகுப்பாரை முன் குறிக்கிறார். அவரது நிழலான சில வேலைகளை நாம் கவனிப்போம்.

#### 1) சுத்தமான தண்ணீர் - சுத்தமான சத்தியம்

ஒரு ஓடைத்தண்ணீர் மிகவும் உவர்ப்பாக இருந்தது. பட்டணமோ நல்லதாக இருந்தது. எலிசா ஒரு கைப்பிடி உப்பை எடுத்துக் கொண்டு, ஓடையின் உற்பத்தி ஸ்தானத்திற்கு சென்று, அந்த தண்ணீர் கர்த்தரின் நாமத்தில் சுத்தமாக வேண்டும் என்று கட்டளையிட்டு அதிலே போட்டார். இதன் நிழலான அடையாளம் ஆயிர வருடயுகத்தில் சுத்தமாக்கப்பட்ட ஓடை தண்ணீர் சத்தியத்தண்ணீரை குறிக்கிறது. உவர்ப்பான தண்ணீர் தப்பறையான போதகத்தை குறிக்கிறது. தண்ணீரை சுத்தப்படுத்துவது, மேசியாவின் நாளில் கர்த்தர் தீர்க்கதரிசி மூலமாக வாக்குத்தத்தம் பண்ணினவைகளை குறிப்பிடுகிறது. "ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஒருமனப்பாட்டு அவருக்கு ஆராதனை செய்யும் படிக்கு, நான் அவர்கள் பாஷையைக் சுத்தமான பாஷையாக மாறப்பபண்ணுவேன்." (செப்பனியா 3:9)

உப்பானது தண்ணீரை சுத்தமாக்கியது. "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று தமது உண்மையான சீஷர்களை நோக்கி ஆண்டவர் கூறினவைகளை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. (மத்தேயு 5:13)

இது மகிமைப்படுத்தப்பட்ட உப்பாக இருந்து, இவர்களிடமிருந்து, ஆயிர வருட யுகத்தில் மானிட இளைப்பாறுதலுக்கான ஆசீர்வாதம் வரும். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல, பூமி, தேவனுடைய மகிமையின் அறிவின் வெளிச்சத்தினால் நிறைந்திருக்கும். (ஏசா 11:9; ஆபகூக் 2:14)

#### 2) கரடிகள் காயப்படுத்தியது

எலிசா பெத்தேலுக்கு பிரயாணப்பட்டு சென்றபோது சில பிள்ளைகள் அவரை, "மொட்டைத் தலையா, ஏறிப்போ" என்று சொல்லி நிந்தித்தார்கள். இவர்கள் குழந்தைகளோ, சிறு பிள்ளைகளோ அல்ல, வாலிபப் பிள்ளைகளாக இருந்தார்கள். எலிசா அவர்களை திரும்பிப் பார்த்து சபித்தார். தண்டனை உடனே வந்தது. இரண்டு பெண் கரடிகள் வந்து அவர்களைப் காயப்படுத்தி பீறிப் போட்டது. கரடிகள் அவர்களை கொன்றதாகவோ, தின்றதாகவோ சொல்லப்படவில்லை. ஆனால் நாற்பத்திரண்டு இளம் துஷ்டர் கரடிகளால் பீறிப்போடபட்டார்கள். அது அவர்களது குற்றங்களுக்கான தண்டனையாக இருந்தது.

இதைப் போலவே ஆயிர வருட யுகத்தில் உலகிற்கான தண்டனை இருக்கும். அதே போல ஒவ்வொரு நல்ல செயலுக்கும் பரிசும் கொடுக்கப்படும். வேதாகம நியாயத்தீர்ப்பில் சொல்லப்பட்ட பிரகாரம் அடிகள் (தண்டனைகள்) மூலமாக உலகமானது நன்மை தீமைகளைப் பற்றி ஆயிர வருட காலத்தில் போதிக்கப்படும். "கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்." (ஏசாயா 26:9) இந்த காரணத்தினாலேயே ஆயிர வருட யுகம் உலகின் நியாயத்தீர்ப்பின் நாள் என்று அழைக்கப்படுகிறது. பரிசுத்த பேதுரு, கர்த்தருக்கு ஒரு நாள் என்பது ஆயிரம் வருஷம் போல இருக்கிறதென்று விளக்குகிறார். (2 பேதுரு 3:8) பரிசுத்த பேதுரு, **"தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதில் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்"** என்று நமக்கு கூறுகிறார். (அப் 17:31) ஜனங்கள் நீதியை நேசிக்கவும் பாவத்தை வெறுக்கவும் கற்றுக் கொள்ளத்தக்கதாக அந்த நியாயத்தீர்ப்பானது வெகுமதியும் தண்டனையும் ஞானமாகக் கொடுக்கும்படியாக இருக்கும்.

#### 3) அவளது விசுவாசத்திற்கு தக்கதாக எண்ணெய்

கடனால் துன்பத்தில் இருந்த ஒரு ஸ்திரீ உதவிக்காக தீர்க்கதரிசி எலிசாவிடம் மன்றாடினாள். அவளிடம் ஒரு குடம் எண்ணெயைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று அவர் தெரிந்து கொண்டார். அவர் அவளிடம், அவளிடத்தில் உள்ள பாத்திரங்களிலும் அயல் வீட்டாரிடம் வாங்கிய பாத்திரங்களிலும் எண்ணெயை வார்த்து அவைகளை நிரப்பி, அவைகளை விற்று அவளது கடனை அடைத்துவிட்டு, மீதம் உள்ளதை வைத்துக் கொண்டு ஜீவனம் பண்ணும்படி கூறினார்.

இந்த ஒரு நிகழ்ச்சி ஆயிரம் வருட யுகத்தில் விசுவாசிகளுக்கு கொடுக்கப்படுகிற ஆசீர்வாதமான வெகுமதிகளை விளக்குகிறது. உண்மையிலேயே கர்த்தர்

நடப்பிக்கிற பொதுவான ஒழுங்குகளை இது விளக்குகிறது. கடன்கள் அடைக்கப்படும். நீதி மீறப்படாமல் இருக்கும். கொஞ்சமாவது ஆசீர்வாதம் உள்ளவர்களுக்கு அதன் மூலம் அற்புதம் செயல்படுத்தப்படும். இது கர்த்தருடைய சித்தத்திற்கு இசைவாக தங்களது விசுவாசத்தை பயன்படுத்துகிறதற்குதக்கதாக ஜனங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பார். அவர்களது முழு தேவைக்கேற்ப இது இன்னும் அதிகரிக்கப்படும்.

நமது கர்த்தராகிய இயேசு தமது அற்புதங்கள் சிலவற்றில் இதை விளக்கியிருக்கிறார். அவர் தமது ராஜ்யத்தில் மகிமையில் வரும்போது மேன்மையான ராஜ்ய வேலைகளுக்கு முன்னைடையாளமாகவும் முன் காண்பிக்கும்படியாகவும் அற்புதங்களை அவர் செய்தார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. (யோவான் 2:11) இவைகளில் ஒன்று, சில மீன்களை வைத்துக் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தது. ஒவ்வொரு மனிதனும் ஒரு திறமையை அல்லது தகுதியை பெற்றிருக்கிறான். நமக்கான பாடம் அது இப்படியாக இருக்கும்; சந்தேகப்படாமல் அவரது வசனங்களுக்கு இசைவாக நாம் பெற்றிருக்கிற திறமையை தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கேட்டு பயன்படுத்த நாட வேண்டும். கர்த்தர் விசுவாசத்திற்கு எப்பொழுதுமே வெகுமதியளிக்கிறார். இந்த விதவையின் காரியத்தில் கூட, அவளது பாத்திரங்களிலும் அயல் வீட்டாரிடம் பெற்ற பாத்திரங்களிலும் நிரப்ப முழுவதும் போதுமானதாக எண்ணெய் இருந்தது. அதன் பிறகு அது நின்றுவிட்டது.

### 4. சீரிய படைத்தலைவனாகிய நாகமானின் குஷ்டரோகம் சொஸ்தமடைதல்

கிழக்கத்திய தேசங்களில் குஷ்டரோகம் ஒரு பயங்கரமான வியாதிகளில் ஒன்றாகவும் பொதுவாக குணப்படுத்த முடியாததாகவும் இருந்தது. இந்த குஷ்ட ரோகம் குணப்படுத்த முடியாததாக இருப்பதால் பாவத்திற்கு அடையாளமாக, நிழலாக வேதாகமம் குறிப்பிடுவதாக காணப்படுகிறது. நாகமான், சீரிய ராஜாவின் படைகளுக்கு தலைவன், ஒரு குஷ்டரோகியாக இருந்தான். சீரியா, இஸ்ரயேல் போரில் சிறைப்பிடிக்கப்பட்ட ஒரு சிறு எபிரேய பெண் நாகமான் வீட்டில் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவள் தன் எஜமான் குஷ்டரோகத்தை பார்த்தாள். அவள் தன் எஜமானியிடம், இஸ்ரயேலில் இருந்த பெரிய தீர்க்கதரிசியாகிய எலிசாவைப் பற்றியும் கூறினாள். அவரிடம் சென்றால் அவர் குணப்படுத்த செய்வார் என்று கூறினாள். மேலும் அவர் அவரிடம் சென்றால் நல்லது என்று கூறினாள்.

இது தான் கடைசியான ஒரே நம்பிக்கை என்று படைத்தலைவன் நாகமானுக்குக் காணப்பட்டது. அவன் இஸ்ரயேல் ராஜாவிடம் கொடுக்க தனது ராஜாவிடம் இருந்து ஓர் அறிமுகக் கடிதம் பெற்றான். அதில் கூறப்பட்டிருந்த செய்தியானது: "இந்த நிருபத்தை எனது படைத்தலைவனாகிய நாகமான் கொண்டு வருவான். அவன் ஒரு குஷ்டரோகியாக இருக்கிறான். நீ அவனை சொஸ்தபடுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்." இது இஸ்ரயேலின் ராஜாவை திடுக்கிடச் செய்தது. அந்த வியாதியை நீக்க தனக்கு சக்தியில்லை என்பதையும் அது குணப்படுத்த முடியாத வியாதி என்பதையும் அவன் அறிவான். சீரியா ராஜா தன்னோடே சண்டையிட முயற்சிக்கிறான். இதற்கு பொருள் போர் என்று அவன் முடிவுக்கு வந்தான். அவன் தன் ஆடையை கிழித்துக் கொண்டான். இது அந்த காலத்து முறைமையாக இருந்தது. இது அவனது பெருந்துயரத்தை குறித்தது. இந்த காரியம் தீர்க்கதரிசி எலிசாவுக்கு சொல்லியனுப்பப்பட்டது. அவர் ராஜாவுக்கு, கவலைப்பட வேண்டாம், தன்னிடம் அந்த படைத்தலைவனை அனுப்பி வைக்கும்படி சொல்லியனுப்பினான். அப்படியே செய்யப்பட்டது.

படைத்தலைவன் தனது பரிவாரங்கள் மற்றும் விலையுயர்ந்த வெகுமதிகளோடு தீர்க்கதரிசியின் வீட்டு வாசலிலே வந்து தான் ராஜாவால் அனுப்பப்பட்டதையும் தான் வந்த காரணத்தையும் எலிசாவுக்கு தெரியப்படுத்தினான். உடனே எலிசா அவனை ஏழுதரம் யோர்தான் நதியில் மூழ்கும்படி சொல்லியனுப்பினான். இதனால் நாகமான் கோபமடைந்தான். அவன் கூறியதாவது: "இந்த மனுஷன் என்னை மதிக்கக்கூட இல்லை. இறங்கி வந்து எனது உயர்ந்த பதவியையும், எனது தேசத்தையும் மதித்து ஏன் அங்கீகரிக்கவில்லை?" பிறகு அவன் யோர்தான் தண்ணீரைக் காட்டிலும் உயர்ந்த தண்ணீர் சீரியா தேசத்திலே உண்டு என்று அறிவித்து, எலிசா என்னை அற்பமாக நடத்தினார் என்று கூறி கோபமடைந்தான்

எலிசாவின் நடத்தை சரியானதாகவும் தேவனுடைய கட்டளையின்படியும் இருந்தது. தேவ கட்டளையின்படி நடப்பதே தேவனுடைய ஜனங்களுக்கு ஞானமான காரியமாக இருக்கும். எல்லாரிடமும் மரியாதையுடன் இருக்க வேண்டும் என்றும் கனப்படுத்த வேண்டியவர்களை கனப்படுத்த வேண்டும் என்றும் அப்போஸ்தலர் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ஊழியர்களை ஏவுகிறார். எனினும் காரியம் நல்லவிதமாக நடந்தது. படைத்தலைவனின் ஊழியக்காரர்கள், நாம் நமது நாட்டிற்கு திரும்பி போகும்போது யோர்தானில் முழுகித்தான் பார்ப்போமே என்று யோசனை கூறினார்கள். இது தவறு இல்லை, நல்லது நடக்கலாமே என்றனர். தீர்க்கதரிசி கூட வெளியரங்கமாக எந்த விலையுயர்ந்த பரிசு பொருட்களையும் கேட்கவில்லை. பணம் பண்ணுவதற்காக இதை செய்ய சொல்லவில்லையே என்றார்கள். நாகமான் கோபம் தணிந்தது. சொல்லப்பட்டபடி யோர்தானில் ஏழு தடவை முழுகினான். பலன் அதிசயத்தக்கதாக சுகம் அடைந்தான்.

நாகமான் நன்றியற்றவனாக இல்லை. அவன் தீர்க்க தரிசியின் வீட்டுக்குத் திரும்பி வந்து. தான் கொண்டு வந்த அன்பளிப்புகளை பெற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினான். ஆனால் தீர்க்கதரிசி எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தேவனுடைய பிரதிநிதியாக மட்டுமே கிரியை செய்தார். அவரது வல்லமைகள் விற்கப்படுவதற்கு அல்ல, அவைகள் தெய்வீக ஆசீர்வாதங்கள். தேவனை ஏற்றுக் கொண்டவனாக

படைத்தலைவன் நாகமான் இதைச் செய்தான். யேகோவா தேவனைத் தவிர வேறு யாரும் இப்படிப்பட்ட ஒரு அற்புதத்தை செய்திருக்க முடியாது என்று நாகமான் அறிவித்தான். தேவனுடைய சித்தத்தை இருதய பூர்வமாக செய்ய நாகமான் வெளியரங்கமாக தயாராயிருந்தான். எதிர்காலத்தில் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி எலிசாவிடம் கேட்டான். தீர்க்கதரிசி அவனை யூதனாக வேண்டும் என்றோ, அவனது நாட்டில் அவனது புறஜாதி மதத்தை கைவிட வேண்டும் என்றோ கூறாமல், அவன் தனது நாட்டிற்கு சென்று தனது அலுவலைத் தொடரும்படி கூறினான்.

படைத்தலைவன் நாகமான் தனது பொறுப்பைப் குறித்து விசாரித்தான். அவன் உண்மை தேவனை ஆராதித்தால், அவனது ராஜா புறஜாதி கோவிலுக்கு செல்லும் போதும் தான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். எலிசா கூறியதின் சாராம்சம் என்னவென்றால், நாகமான் முழுமனதுடன் உண்மையான தேவனை ஏற்றுக் கொண்டால், புறஜாதி தெய்வங்களின் கோவிலுக்கு செல்வதில் தவறில்லை என்பதாகும். ஏனெனில் யேகோவா தேவனை அவன் பின்பற்றுவது அவரால் அங்கீகரிக்கப்படும்.

## R5781 Other Restitution Types
## மற்ற திரும்பக் கொடுத்தலின் நிழல்கள்

*2 ராஜாக்கள் 6 :8 – 23*

*எலிசா சூனேமியாளின் மனை உயிரோடெழுப்புகிறார்– ஊழியக்காரன் கேயாசியை தண்டிக்கிறார் – சீரியாவின் ராணுவத்திற்குள் புகுந்து, அவர்களுக்கு தீமைக்கு பதிலாக நன்மை செய்கிறார் – நேர்மைக்கான முக்கியமான பாடம்.*

*"கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளைய மிறங்கி அவர்களை விடுவிக்கிறார்." சங்கீதம் 34:7*

இன்றைய பாடத்தில் எலிசா சூனேமியாளின் மகனை உயிரோடெழுப்புவது, தனது ஊழியக்காரன் கேயாசியை குஷ்ட ரோகத்தினால் தண்டிப்பது மற்றும் சீரியாவின் ராணுவத்தை பொறியில் சிக்க வைப்பது போன்றவைகளை கவனிக்கிறோம். (2 ராஜா 4:8–37; 5:20–27) இவைகள் தேவனுடைய ராஜ்யத்தின் காரியங்களுக்கு சரியான நிழலாக இல்லா திருந்தாலும், அப்பொழுது நடைமுறையில் இருக்கும் ஒழுங்குகளை குறிக்கிறது. நல்லது செய்பவர்களுக்கு வெகுமதியையும், தெரிந்தே தவறு செய்பவர்களுக்கு தண்டனையையும் அவைகள் குறிக்கின்றன. இந்த அனைத்து ஒழுங்குகளும் மேசியாவின் ராஜ்யத்தில் அமலில் இருக்கும். இவைகளின் கீழ் படிப்படியாக முன்னேற்றம் பெறும். "கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்பொழுது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்." (ஏசாயா 26:9)

### சூனேமியாளின் மகனை உயிரோடெழுப்புவது

சிருஷ்டிப்பின் பட நாடகத்தில் (Photo-Drama of Creation) இலட்சக்கணக்கானோர் எப்படி எலிசா சூனேமியாளின் மகனை மரணத்திலிருந்து எழுப்பி அவனது பெற்றோர்களிடம் ஒப்படைக்கிறார் என்கிற மிகவும் மனதை தொடுகிற காட்சியை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். இப்படி மனதை தொடுகிற படத்தை இதற்கு முன் (1915ஆம் வருடம்) தயாரித்திருக்க முடியாது. இது வருகிற ஆயிரம் வருட யுகத்தில் இழந்ததை திரும்ப கொடுக்கிற வேலையை படம் பிடித்து காட்டுகிறது. அப்பொழுது, தற்காலத்தைக் காட்டிலும், அதிக சாதகமான மற்றும் சந்தோஷமான சூழ்நிலையில், அனுபவ பள்ளியில் தங்களது படிப்பை முடிக்கவும், மறுபடியும் ஜீவனைப் பெறவும் மரண நித்திரையிலிருந்து விழித்தெழுந்திருப்பார்கள். சபை வகுப்பார் மட்டுமே இந்த யுகத்தில் கேட்கிற காதையும், விசுவாச கண்களையும் மற்றும் கீழ்ப்படிகிற இருதயத்தையும் பெற்று கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

### கேயாசி குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டான்

கேயாசி அநேக விதங்களில் எலிசாவுக்கு உண்மையுள்ள ஊழியனாக இருந்தான். இதன் பலனாக பெரும்பாலான ஜனங்களுக்கு கிடைக்காத அறிவின் ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தான். அறிவிலிருந்து பொறுப்பு வந்தது. ஆகையால் கபடம் மற்றும் வஞ்சகத்திற்கு கடுமையான தண்டனை அளிக்கப்பட்டது. "நீதிமான் நீதியை விட்டுத் திரும்பி, தெரிந்தே பாவம் செய்யும்போது அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; துன்மார்க்கன் தனது துன்மார்க்கத்தை விட்டு மனந் திரும்பி தேவனிடம் வரும்போது அவன் மன்னிக்கப்பட்டு தேவனுடைய குடும்பத்திலே சேர்த்துக் கொள்ளப்படுவான் என்ற வசனத்தை நாம் நினைவூட்டப்படுகிறோம். அவனது பழைய தீமைகள் மனம் மற்றும் சரீர பலவீனத்தின் கனிகளைத் தவிர முற்றிலுமாக மன்னிக்கப்படும். (எசேக்கியேல் 3:17–21; 18:20–24;33:10–16)

படைத்தலைவன் நாகமான் தனது குஷ்டரோகம் நீக்கப்பட்டு தன்னிடம் நடப்பிக்கப்பட்ட அற்புதத்தை உணர்ந்தபொழுது தேவனுக்கு ஸ்தோத்திரம் பண்ணவும் தீர்க்கதரிசி எலிசாவுக்கு தான் கொண்டு வந்த வெகுமதிகளை கொடுக்கவும் திரும்பி எலிசாவிடம் வந்தான். ஆனால் எலிசா அதில் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆவிக்குரிய காரியங்கள் எப்பொழுதும் பணத்திற்கு விற்கப்படுவதில்லை என்று நாம் நம்புகிறதை இதில் அவர் விளங்கப்பண்ணினார். இந்த காரணத்தினால்தான் சில ஊழியர்கள் தற்காலத்தில், பொருட்காட்சி, பணவசூல் போன்ற எந்த பணம் சேர்க்கும் காரியத்தையும் எதிர்க்கிறார்கள். கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுப்பவர்கள் மனமுவந்தும், எந்தவித பலவந்தமும் இல்லாமல் தானாக முன்வந்து கொடுக்க வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாகும். "தம்மை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்." (யோவா 4;23) கர்த்தருக்காகவும் கர்த்தரினிமித்தமும் கொடுப்பது ஒரு சலுகையாக இருக்கிறது. ஏனெனில் அன்பளிப்புகளை பெறுவதற்கு சர்வவல்லவர்

ஏழையல்ல; வெள்ளி, பொன் அனைத்தும் அவருடையவைகள்; ஆயிரமாயிரமாய் மலைகளில் திரிகிற மிருகங்களும் அவருடையவைகள். (ஆகாய் 2:8; சங்கீதம் 50:10)

இப்படிப்பட்ட ஒரு உயர்ந்த உதாரணத்தின் மூலம் கேயாசி பலனடைந்திருக்க வேண்டும். ஆனால் அவன் அப்படியல்ல. பேராசை தனது மனதிற்குள் வர அவன் அனுமதித்தான். உயர்ந்த பாபிலோனிய வஸ்திரங்களையும் அநேக சணல் மாற்று வஸ்திரங்களையும் அவன் பார்த்திருந்தான். அவன் ஒரு ராஜகுமாரனைப் போல இருக்க விரும்பினான். நாகமான் தனது வெகுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படாததற்கு அவன் வருந்தியதை கேயாசி உணர்ந்து கொண்டான். கேயாசி அவனைத் பின் தொடர்ந்து சென்று, தனது எஜமானாகிய தீர்க்கதரிசி தனக்காக அல்ல, தனது ஊழியக்காரர்களுக்காக வெகுமதிகளை ஏற்றுக் கொள்வதாக கூறினார் என்று பொய் சொன்னான். தந்திரம் வெற்றியடைந்தது. ஊழியக்காரன் எலிசாவின் வீட்டில் காணப்பட்ட ஒருவனாக அடையாளம் கண்டுக் கொள்ளப்பட்டான். பொருட்கள் எல்லாம் சந்தோஷத்துடன் அவனிடம் கொடுக்கப்பட்டன.

அவைகளை அவன் ஒளிய வைத்தான். தீர்க்கதரிசி அவனை அழைத்து எல்லாவற்றையும் கூறி அவனுக்கு தண்டயையாக, குஷ்டரோகத்தை வழங்கினார்.

வரவிருக்கிற யுகத்திலும் கூட இப்படியே இருக்கும். எந்த ஒரு கீழ்ப்படியாமையும் உடனுக்குடன் தண்டனைக்கு உள்ளாகும். எழுதப்பட்டுள்ளது போல அந்த காலத்துக்குரிய நியாயாதிபதிகள் கண் கண்டபடியும், காது கேட்டபடியும் தீர்ப்புச் சொல்லாமல் நீதியின்படி தீர்ப்புச் செய்வார்கள்.

## எலிசாவை பிடிக்க முயற்சிக்கப்பட்டது

படைத்தலைவன் நாகமானின் மரணத்திற்கு பிறகு சீரியா ராஜா இஸ்ரயேலுக்கு விரோதமாக போர் அறிவித்தான். சீரியா ராஜாவின் படையின் பாளயமிறங்கும் இடம் முன்னமேயே இஸ்ரயேல் ராஜாவுக்கு தெரிந்திருப்பது குறித்து அவன் ஆச்சரியப்பட்டான். ஒரு நகரத்தை பிடிக்க அவன் திட்டமிட்டால் இதன் அனைத்து விபரங்களும் இஸ்ரயேல் ராஜா அறிந்திருந்ததாகக் காணப்பட்டது. இப்படியாக அவனது முயற்சிகள் பலனில்லாமல் போயின. தனது திட்டங்களை எல்லாம் இஸ்ரயேல் ராஜாவுக்கு அறிவிக்கிற உளவாளி தமது ஊழியக்காரர்களில் யார் இருக்கிறார்கள் என்று அறியவோ அல்லது அதற்கான விளக்கத்தையோ அறிய முற்பட்டான். அதற்கு அவனது ஊழியக்காரர்களில் ஒருவனால் அவனுக்கு சொல்லப்பட்ட பதிலாவது: "நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரயேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரயேலின் ராஜாவுக்கு அறிவிப்பான்." யேகோவா தேவனைப் பற்றியும் எலிசாவைப்பற்றியும் படைத்தலைவன் நாகமான் மூலம் ராஜாவின் குடும்பத்தார் சிலருக்கு அறியப்பட்டிருந்தது.

வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் சீரியா ராஜா எலிசாவை பிடிக்கும்படி முயற்சித்தான். அவர் மூலமாக தனக்கோ தனது பக்கமோ எந்தவித நன்மையும் கிடைக்காமல் போனாலும், அவரை இஸ்ரேல் ராஜாவுக்கு தகவல் அனுப்பாமல் இருக்கும்படி செய்ய நினைத்தான். எலிசா எங்கே இருக்கிறார் என்பதை கண்டுபிடிக்கும்படி உளவாளிகளை அனுப்பி. அவர் தோத்தானில் இருக்கிறார் என்பதை அறிந்து, அந்த பட்டணத்தை வளைந்து கொள்ளும்படி குதிரைகளையும், இரதங்களையும் போதுமான அளவுக்கு படையையும் அனுப்பினான். அவன், எலிசா தப்பிக்க முடியாதபடிக்கும், பட்டணத்தை மாத்திரம் அல்ல, தீர்க்கதரிசியையும் பிடிக்கும்படியும் செய்தான்.

எலிசாவின் ஊழியக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில் எதிரியின் இராணுவம், யாரும் தப்பித்து போக முடியாதபடி பட்டணத்தை சுற்றி வளைத்திருக்கக் கண்டான். அவன் பயந்து கூறியதாவது: "ஐயோ, என் ஆண்டனே, நாம் என்ன செய்வோம்?" "பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைக் காட்டிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" என்ற பதில் உடனடியாக வந்தது. ஊழியக்காரன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை; ஏனெனில் எப்படிப்பட்ட தெய்வீக வல்லமை தனது எஜமானனிடம் இருந்தது என்பதை அவன் உணர்ந்திருக்க வில்லை. பிறகு, எலிசா, அவனது கண்களைத் திறந்தருளும்படி தேவனிடம் வேண்டினார். இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினி மயமான குதிரைகளும், இரதங்களும் நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். அந்த மனிதனை உற்சாகப்படுத்துவதற்கும் தேவனுடைய வல்லமையை உறுதிப்படுத்துவதற்கும் இதுவே போதுமானதாக இருந்தது.

எப்படிப்பட்ட ஒரு விசேஷித்த காட்சி. சந்தேகத்திற்கு இடமில்லாமல் அது ஒரு காட்சிதான், உண்மையில்லை.

ஆனால் நோக்கத்தை அது நிறைவேற்றியது. தேவனுடைய வல்லமை அர்ப்பணம் செய்த அவரது பிள்ளைகள் அனைவரையும் சுற்றி வரையறையின்றி சூழ்ந்திருக்கிறது. ஆவியின் ஜீவிகள் முற்றிலுமாக மனித கண்களுக்குத் தெரியாமல் வல்லமைகளை அப்பியாசப்படுத்துகிறார்கள். சரியான கருத்தை பெறுவதே இதன் முக்கியமான காரியமாகும். அனைத்து சூழ்நிலைகளிலும் சர்வ வல்லவரின் வல்லமை தம்முடையவர்களைச் சுற்றிலும் பின்னாடியும் நிற்கிறது. தெய்வீக திட்டத்தின் இசைவின்றி இந்த வகுப்பாருக்கு எதுவும் நடக்காது. அவர்கள் அனுபவங்களில் எது நடந்தாலும் தெய்வீக அனுமதியுடன் அவருக்கு தெரிந்தே நடக்கும். ஆகவே இந்த வகுப்பாருக்கு, எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாக இருக்கிறது.

## சீரிய ராணுவம் பிடிக்கப்பட்டது

சீரிய படைகளுக்கு கண் மயக்கம் உண்டாகும்படி தனது தெய்வீக வல்லமையால் தீர்க்கதரிசி செய்தார். அது எப்படிப்பட்ட வல்லமையாக இருந்தது என்பதையும் அது எப்படி நிறைவேற்றப்பட்டது என்பதையும் நாம் கற்பனை செய்துதான் பார்க்க முடியும். சந்தேகத்திற்கிடமில்லாமல், அவர்களது கண்கள் நன்கு திறந்தே இருந்தது; அவர்கள் மலைகளையும், பள்ளத்தாக்குகளையும் சாலைகள் முதலானவைகளை பார்க்க முடிந்தது. ஆனால் அவர்களது புரிந்து கொள்ளும் கண்கள்

மயக்கமூட்டும் வகையில் மூடப்பட்டது. அவர்களை சரியான பட்டணத்திற்கு அழைத்துச் செல்வதுபோல அவர்கள் எண்ணும்படி எலிசா செய்தார். இப்படியாக அவர் செய்து அவர்களை சமாரியாவுக்கு வாசல் வழியாக அழைத்துச் சென்றார். அங்கே அவர்கள் சமாரிய ராணுவத்துக்கு நடுவே நின்றார்கள். அவர்களது கண்மயக்கம் நீங்கும்படி செய்து, அவர்கள் உருவின பட்டயங்களுடனும் ஈட்டிகளுடன் இருந்த சமாரிய படையின் நடுவே தப்பிக்க வழியின்றி இருப்பதை உணரும்படி செய்தார். அவர்கள் சிக்குண்டிருந்தார்கள். அவர்கள், எந்தவித தீங்கும் அடையாமல் நன்மையும் போதனையும் பெற்றார்கள்.

இஸ்ரயேலின் ராஜா அவர்களை கொன்று போடலாமா என்று தீர்க்கதரிசியிடம் கேட்டான். அதற்கு எலிசா, "வேண்டாம், இவர்கள் புசித்துக் குடித்து, தங்கள் ஆண்டவனிடத்தில் போகும்படிக்கு, அப்பமும் தண்ணீரும் அவர்களுக்கெதிரே வையும்"என்று கூறினார். ராஜா நல்ல ஒரு மனதுடன் அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் மட்டும் கொடுக்காமல், விருந்து செய்து, அவர்களை நண்பர்களாக பாவித்து ராஜாமரியாதை செய்தான். அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு போக அனுமதிக்கப்பட்டார்கள். அங்கே அவர்கள் தாங்கள் பெற்ற விநோதமான அனுபவங்களைப் பற்றியும் தங்கள் ராஜாவிடம் கூறி, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இஸ்ரயேலுக்கு விரோதமாக போரிட்டு ஜெயிப்பது இயலாத காரியம் என்பதை விளங்கப் பண்ணினார்கள்.

**R5785**
**(R5290)**

## "God Manifest in the Flesh"
## "தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்"

*தேவ பக்திக்குரிய இரகசியமானது மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார்." (1 தீமோத்தேயு 3:16)*

ஜீவனின் ஊற்று அல்லது ஜீவனின் ஆரம்பமாகிய தேவன் தம்மை பல்வேறு சிருஷ்டிகளில் வெளிப்படுத்த விரும்புகிறார். அனைத்து அறிவுள்ள ஜீவிகளும் அவருடைய பிள்ளைகளாக அங்கீகரிக்கப்பட்டு அவருடைய ரூபத்தின்படியே இருந்தனர். தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாயிருக்கிற லோகாஸ் தெய்வீக ரூபத்தின்படி இருந்தார். அவர் ஆவியின் ஜீவியாக மட்டுமல்ல (தேவன் ஆவியாயிருக்கிறார்) அதற்கும் மேலாக அவரது சிருஷ்டிகராகிய பிதாவானவரின் குணலட்சணங்களுக்கு ஒத்திருந்தார்.

மேலும், தேவதூதர்கள், கேரூபீன்கள், சேராபீன்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட சிருஷ்டிகளை சிருஷ்டிப்பதில் லோகாஸ் முகவர் ஆன போது, அவர்களனைவரும் பிதாவானவரின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டார்கள். பல்வேறு சிருஷ்டிகளை பார்த்ததால் தேவபுத்திராகிய தூதர்கள் ஏகமாய் கெம்பீரித்தார்கள். இன்னும் வேறு வகையான சிருஷ்டிகளை, மனுக்குலத்தை சிருஷ்டிக்க நேரம் வந்தபோது, தேவன் லோகாஸ் மூலமாக தமது சாயலின்படியும் ரூபத்தின்படியும் சிருஷ்டித்தார். மேலும் மனித சிருஷ்டிப்பை அவர் நல்லது என்று கண்டதாக அறிவித்தார்.

முதல் மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்து எட்டாம் சங்கீதம் விளக்குகிறதாவது: "நீர் அவனை தேவ தூதரிலும் சற்று சிறிய வனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும், ஆகாயத்து பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடலில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினீர்." இவைகளெல்லாவற்றிற்கும் ஆதாம் தலைவனாக, ராஜாவாக இருந்தான். தூதர்கள் பிரதிநிதித்துவப்படுத்தாதை மனிதன் பிரதிநிதித்துவப்படுத்தினான். தூதர்கள் எதற்கும் மேலாக வைக்கப்படவில்லை. தேவனே அனைத்திற்கும் ராஜாவாக இருக்கிறார். ஆதாமும் லோகாஸும் ஏதோ ஒன்றின்மேல், ஏதோ ஒருவகையில் மேலாக வைக்கப்பட்டார்கள்.

தேவன் மனிதனை உண்டாக்கியபோது, தம்மைப்போலவே ஆளுகை உடையவனாக சிருஷ்டித்தார். தூதர்களை தேவன் சிருஷ்டித்தபோது, அவர்களை பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தினார். (கேருபீன்கள், சேராபீன்கள் மற்றும் தாழ்ந்த நிலையிலுள்ள தூதர்கள்) மனிதனை உண்டாக்கியபோது, அவன் தேவ சாயலில் உண்டாக்கப்பட்டான். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ஆனால் தற்போது விழுந்துபோன மாம்சத்தில் தேவன் வெளிப்பட்டார் என்று நாம் கூற முடியாது. தேவனுடைய உண்மையான சாயல் பாவத்தில் அழிக்கப்பட்டுவிட்டது. பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையால் தேவனுடைய சாயலின் சுவடு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அழிந்துவிட்டது என்று வேதவாக்கியங்கள் தெளிவாக காண்பிக்கின்றன.

ஆதாம் தேவனுடைய மகன் என்று அழைக்கப்பட்டார். ஏனெனில் அவர் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருந்தார்; ஆனால் அவர் ஒரு பாவியான பொழுது இந்த உறவை அவர் இழந்துவிட்டார். யூதர்களில் யாரும் தேவனுடைய பிள்ளையாக இருக்கவில்லை. ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என்று அழைக்கப்பட்டார். தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் மற்றும் இஸ்ரயேலில் இருந்த மற்றவர்களையும் அங்கீகரித்து, பெரிய ஆசீர்வாதம் அவர்களுடையது என்று குறிப்பிட்டிருந்தாலும், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக கருதப்படமுடியவில்லை. தேவன் ஆபிரகாமுடன் பேசும்போது, எனது நண்பனே, நான் உன்னுடன் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று கூறினார்.

ஆனால் ஆபிரகாமின் மகா மெய்யான சந்ததி வரும்வரை எல்லாம் காத்திருக்க வேண்டும். மெய்யான ஆபிரகாமின் சந்ததியாகிய, மீட்பராகிய இவர் எப்படி வருவார் என்பதற்கு நமக்கு பதிவுகள் இருக்கிறது. லோகாஸ் எப்படி மாம்சமாக்கப்பட்டு, மனுஷருக்குள்ளே வாசம் பண்ணினார் என்று விவாதித்த பிறகு, பரிசுத்த யோவான், இயேசு

பிதாவானவரின் ஒரே பேறான குமாரன் என்கிற மகிமையையும் முழு கிருபையையும் முழு சத்தியத்தையும் பெற்றிருந்தார் என்று அறிவிக்கிறார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதில் இதுவே எல்லாவற்றிற்கும் மேலான வழியாக இருந்தது.

தாழ்ந்த விலங்கினங்கள் ஆதாமை பார்த்தபோது, அவைகளுக்கான கிடைக்கத்தக்க சிறந்த தேவனுடைய பிரதிநிதியை கண்டன. இதற்கும் மேலாக தேவனுடைய ரூபத்தின்படி மாம்சத்திலே உண்டாக்கப்படமுடியாது. தமது குமாரனை உலகிற்கு அனுப்ப தேவனுக்கு நேரம் வந்தபோது, மனிதனின் மீட்பராக இருக்கக்கூடிய பெரிய சலுகையை அவருக்கு முன் வைத்தார். அவர் மாம்சமாக்கப்பட்டபோது, அவரை பார்த்தவர்கள் பிதாவானவரின் ஒரே பேறானவருடைய மகிமையைக் கண்டார்கள். யாராவது அவரை பார்த்தபோது, பார்க்க சாத்தியப்படுவதில் அதிக பட்ச அளவுக்கு பிதாவானவரை பார்த்தார்கள்.

தேவன் மோசேயிடம் கூறியதாவது: "எந்த மனிதனும் என் முகத்தை பார்த்து உயிரோடிருக்க முடியாது." தர்சு பட்டணத்தானாகிய சவுல் மகிமையடைந்த இயேசுவின் ஒரு கண சிறு ஒளிக்கீற்றை மட்டுமே பார்த்தான். முழு மகிமையையும் பார்த்திருந்தால் சவுல் உயிரோடிருந்திருக்க மாட்டான். இயேசு பிதாவானவரின் தற்சொரூபமாயிருந்தார். தேவனைப் பார்த்து யாரும் உயிரோடு இருக்க முடியாததைப் போல மகிமையடைந்த இயேசுவைப் பார்த்தும் உயிரோடிருக்க முடியாது.

### தேவன் பிரபுக்களில் வெளிப்பட்டார்

மனிதருக்குள்ளே கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது, பூமிக்குரிய பிரதிநிதிகள் இருப்பார்கள். இவர்கள் மூலமாக மேசியா ஆயிர வருட யுகத்தில் மனுக்குலத்தை ஆளுகை செய்து உயர்த்துவார். இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை தேவன் செய்திருக்கிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் மற்ற பழைய ஏற்பாட்டு கால பாத்திரகள் (Ancient worthies) சேர்ந்த இப்படிப்பட்ட ஒரு வகுப்பாரை தயார்படுத்தியிருந்தார். இவர்கள் மனித பூரணத்திற்கு எழுப்பப்படுவதற்கு பாத்திரவான்களாக கருதப்படுகின்றனர். அவர்களது உயிர்த்தெழுதலில் எந்தவித சுபாவ மாற்றத்தையும் பெறமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. நமது கர்த்தர் யோர்தானில் ஜெநிப்பிக்கப்பட்டதை தவிர பெந்தெகொஸ்தே நாள் வரை யாரும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை." ஆகையால் அந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் தேவனை சந்தோஷப்படுத்துவதில் வெறும் சாட்சியங்களாக இருக்கிறார்கள். இவர்கள் தேவனிடத்திலும் நீதியினிடத்திலும் விசுவாசமாயிருந்தபடியினால், அந்த பழைய ஏற்பட்டு கால பாத்திரர்களில் சிலர், "கல்லெறியுண்டார்கள்; வாளால் அறுப்புண்டார்கள்; சிலர் பரீட்சை பார்க்கப்பட்டார்கள்; பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள்; செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை." (எபிரேயர் 11:37,38)

தேவனுடைய வாக்குத்தத்தங்களை அவர்கள் பெற்றிருந்தாலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அவர்கள் அடையவில்லை. உதாரணமாக, ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தமாவது: "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கு கொடுப்பேன்." தேவனுடைய வார்த்தை உண்மையாக நடந்தது என்பதை அறிய ஆபிரகாம் ஒரு உயிர்த்தெழுதலை பெற வேண்டும். அவர் அந்த இடத்தை பெற வேண்டும். கனம், மகிமை, சாகாமை கொடுக்கப்படும் என்ற வாக்குத்தத்தமோ, தெய்வீக சுபாவத்திலும் இயேசுவின் உடன் சுதந்தரராவதிலும் பங்கு கிடைக்கும் என்ற வாக்குத்தத்தமோ கொடுக்கப்படவில்லை. அப். 7:51; எபிரேயர் 11:8–10, 17,39,40ஐ பார்க்கவும்.

இது இயேசுவிலிருந்துதான் ஆரம்பித்தது. கிறிஸ்து, ஜீவனையும் அழியாமையையும் மனிதருக்கு அறிவித்ததோடல்லாமல் அவரோடு கூட இந்த ஜீவனை பெறக்கூடிய சலுகையையும் பெறமுடியும் என்று அறிவித்தார். "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களால் நமக்கு உறுதிபண்ணப்பட்டது." "(எபிரேயர் 2:3) ஆனால் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள், தேவனிடம் விசுவாசம் வைத்திருந்தார்கள். அவரது வாக்குத்தத்தத்தின் மேல் நம்பிக்கை வைத்து, அதன் நிறைவேறுதலுக்காக காத்திருந்தார்கள். தேவன் சாபத்தை நீக்கிப் போடுகிறார் என்ற வெறும் அறிவிப்பை மட்டும் பெற்றிருந்தார்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களை பெறுவதற்கு ஆபிரகாமின் சந்ததியே மகிமையின் வழியாக இருக்கும். "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்." ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அவர்கள் அடையவில்லை என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். "அவர்கள் நம்மையல்லாமல் (சுவிசேஷ சபை) பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரேயர் 11:40)

நமது ஆசீர்வாதங்களை நாம் பெறும் முன் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் அவர்களது ஆசீர்வாதங்களை அடைய முடியாது. மணவாட்டி மகிமையடைய வேண்டும். அதன் பிறகே பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகள் வந்து அவர்களது ஆசீர்வாதத்தை பெறக் கூடும். அதன் பிறகே ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். மேலும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அனைத்து பாத்திரர்களும் கிறிஸ்துவின் முதல் குமாரர்களாக இருப்பார்கள். பிதாக்களுக்கு பதிலாக குமாரர்கள் இருப்பார்கள். அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக அவர் வைப்பார். (சங்.45:16) பூரண மனிதர்களாக உயிர்த்தெழுந்து, அவர்கள் தேவனுடைய பரிபூரண சாயலாக இருப்பார்கள். இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் ஒவ்வொருவரிலும் தேவன் மாம்சத்தில் வெளிப்படுவார். அந்த சமயத்தில் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் கீழ் அவர்கள் பிரபுக்களாக இருந்து பூமியை ஆளுகை செய்வார்கள்.

"நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில்

இருக்குகிறவர்களாக காண்பீர்கள்" (லூக்கா 13:28) என்று இயேசு சொன்னபோது இதை உறுதிப்படுத்தினார். அவர் தம்மைப்பற்றி, "இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று கூறினார். (யோவான் 14:19) நமது உயிர்த்தெழுதலில் நாம் ஆவிக்குரிய நிலைமையை பெறவில்லை என்றால் இனி எப்பொழுதும் அவரை பார்க்கவே முடியாது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், "இன்னும் உயிரோடு இருப்பவர்களும்" அவரது வெளிப்படுதலில், அவரைப்போல ஆக்கப்பட்டு, "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்கள்." நாம் மறுரூபமாக்கப்படும் நிமிடத்தில், நமது கர்த்தரை மாத்திரமல்ல, அனைத்து பரிசுத்த தூதர்களையும், இப்பொழுது நம்மால் காணக்கூடாமல் இருக்கக் கூடிய ஆவியின் சுபாவத்தில் இருக்கக்கூடிய அனைவரையும் நாம் பார்ப்போம். அவர்கள் மனுக்குலத்தைக் காணமுடியும். ஆனால் மனுக்குலம் அவர்களை காண முடியாது.

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். முதலில் ஆதாம் மூலமாயும், இரண்டாவது இயேசு மூலமாயும், மூன்றாவது, பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் மூலமாயும் வெளிப்பட்டார். இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் மற்ற உலக ஜனங்களைக் காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்களாக காணப்படுவார்கள்.

### நமது கர்த்தரின் புனிதத் தன்மையின் அழகு

போர்வீரர்கள் கேலி (ஏளனம்) செய்து, முள் முடியை நமது கர்த்தரின் தலையில் வைத்தார்கள். சிவப்பான மேலங்கியை அவருக்கு தரிப்பித்து நியாய ஸ்தலத்திற்கு கொண்டு வந்தார்கள். அவரைப் பார்த்த பிலாத்து, "இதோ, அந்த மனுஷன்!" (ஸ்ட்ராங்ஸ் கன்கார்டென்ஸ் பார்க்கவும்)" இதோ, அந்த முகம்! என்றான். நான் ஒரு புறஜாதியான், நான் உங்களுடைய இனம் அல்ல. ஆனால் பூமியிலே மிக மகிமையான யூதனை என்னிடம் தண்டனை கொடுக்கும்படி இங்கே அனுப்பியிருக்கிறீர்கள்! உள்ளான அழகு முகத்தில் பிரதிபலிக்காமல் உண்மையிலேயே அழகான குணலட்சணத்தை யாரும் பெற்றிருக்க முடியாது. ஒருவன் கெட்ட குணமுடையவனாயிருந்தால் அதை அவன் முகபாவத்திலிருந்து மறைக்க முடியாது. அவன் அன்பான குணமுடையவனாயிருந்தால், அது அவனது முகத்தில் தெரியும். நமது கர்த்தரைப் பற்றி நாம் என்ன நினைப்போம்! அவரது முகம் ஆச்சரியமான அழகை உடையதாக இருந்திருக்க வேண்டும்! அவர் தேவனுடைய ரூபமாகிய வசீகரமான பேச்சையும், ஆச்சரியமான அழகையும் உடையவராயிருந்ததினால், அவரைப் பார்க்க ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்ததில் ஆச்சரியமேதுமில்லை.

சங்கீதக்காரன் கேட்கிறதாவது; "மனுஷனை நீர் நினைப்பதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்? நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்." ஆனால் மனிதன் பாவத்திற்குள், விரோதத்திற்குள், இருளுக்குள் விழுந்தான். சாத்தானின் செல்வாக்கு கிரியை செய்து, சிருஷ்டிகராகிய தேவனுடைய சாயலிலிருந்து மனிதனை விழத் தள்ளியது. மனுக்குலத்தை பாவத்திலிருந்தும், அபூரணத்திலிருந்தும் திரும்பக் கொண்டு வருவது தேவனுடைய மகா நோக்கமாக இருக்கிறது. நீதியாயிருக்க விரும்புகிற அனைவரையும் தேவன் உயர்த்துவார்.

"தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதை காண்கிறோம்." (எபிரேயர் 2:9) மீட்பின் வேலை கல்வாரியில் தேவனுடைய பரந்த திட்டத்தின் அடிப்படை போடப்பட்டதை நாம் காண்கிறோம். மனித மீட்புக்கு இரட்சகரின் ஜீவனே விலைக்கிரயமாக இருக்க வேண்டும் என்பதை நாம் காண்கிறோம்." மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து (அபிஷேகம் பண்ணப்பட்டவர், மேசியா வகுப்பார்). பின்பு அவர் வருகையில் (அவரது பிரசன்னகாலத்தில் – கிரேக்கம்) அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரிந்தியர் 15:21–23) இயேசு கூறுகிறதாவது: "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்." இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். (வெளி 20:6)

ஆகையால் "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்பது மனிதனாகிய இயேசு கிறிஸ்துவில், அவரது பரிபூரணத்தில் தெளிவாக காண்பிக்கப்பட்டது. ஆனால் இயேசு முப்பது வயதை அடைந்தபோது, தம்மை பலிக்காக யோவானிடம் யோர்தானில் ஒப்புக்கொடுத்த பொழுது, தேவன் விசேஷித்த விதமாக, குறிப்பாக, இயேசுவின் மாம்சத்தில் வெளிப்பட்டார். "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது." அங்கே அவர் எந்தவித கறையும் இல்லாமல் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக ஒப்புக் கொடுத்தார். புறா அவர் மேல் இறங்கினதின் மூலம் தெய்வீக ஒப்புதல் குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டது. பரிசுத்த ஆவி புறாவைப் போல் இருக்கிறது என்று இது குறிப்பிடவில்லை. அவர் மேசியா என்பதற்கான ஒரு வெளியரங்கமான அடையாளத்தை யோவானுக்கு தேவன் கொடுத்தார். இதனிமித்தம் இப்படியாக அவர் சொல்லக் கூடும்: "ஆவி பரலோகத்திலிருந்து ஒரு புறாவைப் போல இறங்கி அவர் மேல் அமர்ந்ததை நான் பார்த்தேன்."

இயேசுவின் ஞானஸ்நானத்திற்கு பிறகு தேவன் அவரிடம் ஒரு விசேஷித்த முறையில் தொடர்பு கொண்டார். அப்போஸ்தலர் யோவான் சபையைப்பற்றி கூறும்போது, தேவன் நம்மிலும், நாம் தேவனிலும் நிலைத்திருக்கிறோம் என்று சொன்னார். (1 யோவான் 4:16) பிதாவானவர் இயேசுவை தமது வாசஸ்தலமாகக் கொண்டு, தமது தெய்வீக திட்டத்தை அவர் அறியும்படி செய்தார். நமது கர்த்தர் கூறியதாவது: "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்கு

சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்கு பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொருங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்." (லூக்கா 4:16-21; ஏசாயா 61:1-3)

## வனாந்தரத்தில் நமது கர்த்தரின் சோதனை

இயேசு பரிசுத்த ஆவியை பெற்ற நேரத்திலிருந்து, பரத்துக்குரிய காரியங்கள் அவருக்கு அறியப்படும்படி செய்யப்பட்டது என்று நாம் வாசிக்கிறோம். ஏனெனில் அப்போஸ்தலர், "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்... அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" என்று கூறுகிறார். இயேசு பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை பெற்றபொழுது ஆவிக்குரிய பகுத்துணருதலை பெற்றுக் கொண்டார். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட நிழல்கள் எல்லாம் தம்மைப்பற்றி குறிப்பிட்டது என்பதைக் கண்டார்.

இவைகளை அவர் பார்த்தபோது, அவர் வனாந்தரத்தில் இருந்ததை நாம் மனதில் நினைக்கிறோம். முழு வேதாகமத்தையும் அவர் தமது மனதில் வைத்திருந்தார். சிறு பிராயத்திலிருந்தே அவர் ஜெப ஆலய கூட்டங்களில் கலந்து கொள்வதை வழக்கமாக வைத்திருந்தார். அவரது பரிபூரண சிந்தையில் வேதவாக்கியங்கள் அனைத்தும் முற்றிலுமாக பதிந்திருந்தது. வேதத்திலிருந்து எந்த வசனத்தையும் அவரால் குறிப்பிட முடிந்தது. சாத்தான் வேத வசனத்தை குறிப்பிடும்போது இயேசு புரிந்து கொண்டார்.

இயேசு நாற்பது நாள் உபவாசம் இருந்து முடியும்போது, அவர் பலவீனமானவராயிருந்தது, அவரை சோதிப்பதற்கு சாத்தானுக்கு ஏற்ற நேரமாக இருந்தது. அவரது தியாக பலியின் மரணத்துடன் இணைந்த அனைத்து அவமானம், இழிவு போன்றவற்றைப் பற்றிய எண்ணம் அவருக்கு முன் இருக்கும்போது, அவரை பயப்பட வைப்பதற்கு அதுவே போதுமானதாக இருக்கும். அவர் ஒரு தெய்வ நிந்தனையாளராக, தேவனுக்கு எதிரானவராக எண்ணப்படுவதற்கு, சாத்தானுக்கு அது மிகவும் சரியான சந்தர்ப்பமாக இருந்தது. மேலும் பிதாவானவர் அவர் சோதிக்கப்படுவதற்கு அனுமதித்தார். இந்த குறிப்பிட்ட நேரத்தில் எதிராளியானவன் அவரை சோதிப்பதற்கு அனுமதித்தார்.

சாத்தானே நமது கர்த்தரின் மனதை நோக்கி கூறினதாவது: நான் உன்னை நன்றாக அறிவேன். நாம் நீண்ட நாட்கள் பரிச்சயம் உடையவர்களாக இருக்கிறோம். நீ எந்த குறிக்கோளுக்காக வந்திருக்கிறாய் என்பதை நான் அறிவேன். நீ ஞானஸ்நானம் பெற்றபோது உன் மேல் வந்த வல்லமையை நீ உணரவில்லை என்பதை நான் அறிவேன். தேவனுடைய வல்லமை எப்படி உன்மேல் வந்தது என்பதை நான் கவனித்தேன். இந்த கற்களை அப்பமாகு என்று கட்டளை இட்டால் மட்டும் போதும். பெரிய வேலைகளை உன்னால் செய்யமுடியும் என்று நான் உணர்கிறேன். இந்த காரியத்தில் நானும் உன்னோடு சேர்ந்து கொள்ள விரும்புகிறேன். முதலில் சாப்பிடுவதற்கு உனக்கு ஏதாவது வேண்டும்.

இயேசு சாத்தானை அறிவார், அவன் லூசிபர் என்பதையும், தேவராஜ்யத்திற்கு விரோதமாக கலகம் செய்ததினால் இந்த கிரகத்தில் (Planet) அவன் சிறையிடப்பட்டான் என்பதையும் அறிவார். சாத்தான் இயேசுவிடம் தோன்றியபோது, அவன் தன்னை ஒளியின் தூதனாக காண்பித்துக் கொள்ளவும். தேவன் பக்கம் இருக்க விரும்புவதாகவும், தற்போது தேவனோடு ஒத்துழைக்க விரும்புவதாகவும், காண்பித்துக் கொள்ள முயற்சித்தான் என்று நாம் நிச்சயிக்கிறோம். ஆனால் அவரது வல்லமை தமது ஜீவனை தக்க வைத்துக் கொள்ள கொடுக்கப்படவில்லை என்பதையும், சோதனைக்கு இடம் கொடுக்கமாட்டார் என்பதையும் இயேசு அறிவார்.

ஆகையால் அடுத்து அவரை உயர்ந்த மலைக்கு சாத்தான் கொண்டு போனான் - இது அவர்களது சிந்தையின் ஆவியில்-அவன் எப்படிப்பட்டவன் என்பதை காண்பித்தான். அவன் "இந்த உலகத்தின் அதிபதி" என்பதையும் மற்றும் அனைத்து ராஜ்யங்களையும் காண்பித்தான். மேலும் அவன் கூறியதாவது; நீ பார், உனக்கு நான் உதவி செய்யக் கூடிய வல்லமையை உடையவனாயிருக்கிறேன். இப்படிப்பட்ட உதவியில்லாமல் உன்னால் கொடுக்க முடியுமா? நான் உன் மீது பரிதாபம் கொள்கிறேன். நீ மனுக்குலத்தை பாதுகாத்து, அவர்கள் அனைவரையும் மரணத்திலிருந்து இரட்சிப்பாய், தேவனுடைய திட்டத்தின்படி நீ பாடுபடுவதற்கு பதிலாக, நாம் இணைந்து கிரியை செய்வோம். நீ பாடுபட வேண்டிய அவசியமில்லை. ஆனால் முதலில் நீ என்னை அங்கீகரிக்க வேண்டும். அந்த வழியில்தான் நான் ஆரம்பித்தேன். எப்படிப்பட்ட ராஜ்யத்தை நான் ஸ்தாபிப்பேன் என்பதை காண்பிக்க விரும்பினேன். நான் சொன்னதாவது;" நான் வானத்துக்கு ஏறுவேன்; தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன்; நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்." நான் எனக்கென்று ஒரு சாம்ராஜ்யத்தை உடையவனாயிருப்பேன். நீ உள்ளே வந்து என்னுடன் பகிர்ந்து கொள்ளும்படி உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நீ கேட்டால் இந்த மகிமையெல்லாம் உனக்கு கொடுப்பேன். இந்த உலகின் அதிபதியாக இருக்கும்படி திட்டமிட்டுள்ளேன். எல்லாம் என் கைக்குள் இருப்பதை நீ பார்க்கவில்லையா?

ஆனால் இந்த சோதனைகளில் இயேசு வெற்றிக்கொண்டார். இனி அவரை சோதிப்பது பிரயோஜனமில்லை என்று சாத்தான் நினைக்கிற அளவுக்கு வெற்றி முழுமையாக இருந்தது. இயேசு பசியாயிருக்கும்போதே அவரை அசைக்க முடியவில்லை என்றால், இனி அவரை சோதிப்பதில் எந்த பிரயோஜனமும் இருக்காது என்று சாத்தான் நினைத்தான். ஆகையால் அதன்பிறகு அவன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று வேதம் கூறுகிறது.

## அவதாரக் கொள்கை வேதத்திற்கு இசைவானதல்ல

இதற்கு பிறகு இயேசு நன்மை செய்யவும், வியாதியஸ்தர்களை சொஸ்தம் பண்ணவும் ஜனங்களுக்கு போதிக்கவும் சென்றார். எல்லாம் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருந்தது. பிதாவானவர் மாம்சீக சரீரத்தில் அவதாரம் எடுத்திருந்தால், அவரால் அவருடைய சித்தத்தை இவ்வளவு சிறப்பாக செய்திருக்க முடியாது. ஆனால் இயேசு அவதாரம் எடுக்கவில்லை. நமது கர்த்தரின் அவதாரக் கொள்கை வேத ஆராய்ச்சி இல்லாத இருண்ட காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொள்கையாகும். ஏனெனில் அவர் தம்மைத் தாமே தாழ்த்தி மனிதனாகி, "மரணபரியந்தமும், அதாவது சிலுவை மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவரானார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லாவற்றிற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்." (பிலிப்பியர் 2:8-11)

## R5785 "Meditation in the Night"

## "இரவில் தியானம்"

"*நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்த களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும் போது, இராச்சாமங்களில் உம்மை தியானிக்கிறேன்." சங்கீதம் 63:5,6*

தாவீதின் ஆத்துமா நிணத்தினாலும் கொழுப்பினாலும் திருப்தியடைந்திருக்கிறது என்கிற இந்த சொற்றொடர், அவர் தேவனுடைய கிருபையையும் ஆசீர்வாதங்களையும் அபரிமிதமாக பெற்றிருந்தார் என்பதை தெளிவாக குறிப்பிடுகிறது. அதிகமான பகுதியை, கொழுத்த பகுதியை பெற்றிருந்தார். அதனால் தேவனை துதித்தார். தேவனுடைய நன்மை, அவருக்கு தேவன் செய்த கிருபையாவது; ஆட்டுத் தொழுவத்திலிருந்து மேய்க்கும் ஒரு பையனை எடுத்து, தமது ஊழியத்திற்கென்று கொண்டு வந்து கடைசியில் இஸ்ரயேலின் சிங்காசனத்திற்கு ராஜாவாக ஆக்கினார். இவை எல்லாவற்றிற்காகவும் அவர் தேவனிடம் மிகவும் நன்றியுடையவராக இருந்தார். தேவனுடைய அனைத்து ஆசீர்வாதங்களுக்காகவும் அவர் தேவனை துதித்தார். அவரது வாய் தேவனை ஸ்தோத்திரிக்க வேண்டும், அவர் சந்தோஷமாக இருக்க வேண்டும், தேவனுடைய அன்பான தயவைக் குறித்து பேச வேண்டும். இதுதான் சரியானதாக இருக்கும். தாவீதின் சங்கீதங்களில் சர்வ வல்லவரை துதித்து ஸ்தோத்திரம் பண்ணுகிற அநேக அழகான சொற்றொடர்களை நாம் காண்கிறோம். அவர் தேவனுடைய மாட்சிமைக் குறித்தும், அவரது ஆச்சரியமான வல்லமை மற்றும் சக்தியைக் குறித்தும் பேசுகிறார். வானங்களை அவரது கைவேலை என்று குறிப்பிடுகிறார்.

தீர்க்கதரிசி கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ண நிச்சயமாக தனது நாவை பயன்படுத்தினார். அவர் கல்வி பயிலுதல் குறைவாக இருந்த காலத்தில் வாழ்ந்தார், மற்றும் குறைவாகவே அவர் படித்தார் என்பதையும் நாம் கவனிக்கும்போது, அவர் பெற்றுக் கொண்டதை நிச்சயமாக நன்மை செய்யும்படி பயன்படுத்தினார் என்பதை நாம் உணருகிறோம். அவரது ஊழியத்தின் கனிகள் நூற்றுக்கணக்கான வருடங்களாக உலகை ஆசீர்வதிக்க கீழே இறங்கி வந்திருக்கிறது. இந்த போற்றுதலை அல்லது பாடுவதை இரவில் செய்ததாக அவர் கூறுகிறார். "என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்." அந்தகாலத்தில் ஜனங்கள் இரவில் வெளிச்சத்திற்காக சந்திரனையும் நட்சத்திரங்களையுமே நம்பியிருந்தனர். நாம் இப்பொழுது பெற்றிருப்பதைப் போல சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், வாயு, மின்சாரம் முதலியவைகளை அவர்கள் பெற்றிருக்கவில்லை. திருவாளர் ராக்பெல்லர் இன்னும் பிறவாதிருந்தார், நவீன கண்டு பிடிப்புகள் இன்னும் வராதிருந்தது. அவர்கள் ஆலீவ் எண்ணெயை பயன்படுத்திய செயற்கை விளக்கை நம்பியிருந்தார்கள். அதுவும் அதிகமாக இல்லை. இதனிமித்தம் ஜனங்கள் சீக்கிரமாக படுக்கைக்குச் சென்றார்கள். தாவீது ராஜா படுக்கையிலிருந்தபோது சர்வ வல்லவரைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தான்; அவரைப்பற்றி தியானித்துக் கொண்டிருந்தான்; ஞானமற்ற காரியங்களை சிந்திக்கவோ, ஞான மற்ற செயல்களை திட்டமிடவோ இல்லை. அவரது மனம் அழகான சிந்தனையினாலும் உயர்ந்த உணர்வுகளாலும் நிறைந்திருந்ததில் ஆச்சரியமில்லை.

### தியானத்திற்கான உயர்ந்த காரியம்

ஒருவருக்கு நேரம் கிடைத்து, சர்வ வல்லவரை சிந்தித்து அவரது நன்மையை அங்கீகரித்து, அவரது எண்ணிறந்த தயைகளுக்காக ஸ்தோத்திரம் பண்ணவும் இராச்சாமத்திலே தியானிப்பவர்கள் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். இந்த வசனத்தைப் பொருத்தவரை, அதை தீர்க்கதரிசனமாக நினைப்பதற்கு காரணம் ஏதுமில்லை. எனினும் தேவனுக்கு இசைவாக இருக்க விரும்புகிறவர்களை அது குறிக்கிறது. தேவனுடைய ஆச்சரியமான திட்டத்தை அறியாத இலட்சக்கணக்கானோர் உலகில் இருக்கின்றனர். ஆகையால் நமது வாய் தேவனை துதிக்க பயன்படுத்தப்படவேண்டும். நாம் படுக்கையில் இருந்தாலும் ஓய்ந்து இருந்தாலும் வேறு எங்கு இருந்தாலும், எல்லா நேரங்களிலும் கர்த்தரை தொடர்ந்து நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் அவரை தியானிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும். கர்த்தரை தியானிக்கிற வெகு சில ஜனங்களை நாம் நினைக்கிறோம். இதை வளர்த்துக்கௌ்ளாதவர்களுக்கு அது நன்மையாயிராது.

தேவனுடைய உயர்ந்த மற்றும் பரிசுத்த கட்டளைகளில் அவரைப் பற்றிய சொற்றொடர்களைக் காண்கிறோம். நீதி, அன்பு, தயவு, நேர்மை போன்ற குணங்களிலும் கொள்கை அனைத்திலும் தேவனை உருவகமாக நாம் பார்க்கவேண்டும். இது அவரைப்போல் நாம் இருப்பதற்கு நம்மை ஊக்கப்படுத்தும். ஒரு உயர்ந்த குணத்தை எந்த அளவுக்கு நாம் போற்றுகிறோமோ அந்த அளவுக்கு நாம் அதை ஆர்வத்துடன் பின்பற்ற விரும்புவோம். இயற்கையில் தேவனுடைய வல்லமையான செயல்களையும் நம்மேல் அவரது தயவுகளையும் எந்த அளவுக்கு நாம் பார்க்கிறோமோ

அதே அளவுக்கு நமது இருதயமும் நாவும் அவரைத் துதிக்கும். இந்த வசனத்தைப் பற்றிய தீர்க்கதரிசன கருத்து இருக்குமேயானால், அனைத்து இருண்ட யுகம், முழுவதிலும், இந்த யுகத்தின் இரவு நேரங்களிலும் தேவனுடைய விசுவாசமுள்ள ஜனங்கள் துதித்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய உண்மையான பிள்ளைகள் அனைவரும் சந்தோஷமான உதடுகளுடன் அவரை துதித்துக் கொண்டிருந்தார்கள். அப்படிச் செய்யாதவர்கள் யாரும் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆகையால் நாம் நமது தேவனை துதிக்க வேண்டும். அவரது பரிசுத்த சித்தத்தையும் வழிகளையும் நாம் அதிகமதிகமாக தியானம் பண்ணவேண்டும். அவைகளுடன் நாம் இசைந்திருக்க நாம் பாடுபடவேண்டும். இப்படியாக நாம் அதிகமதிகமாக பரலோகத்திலுள்ள நமது பிதவானவரைப் போல ஆவோம்.

## R5785 "To Serve, Not to be served"

## "ஊழியம் கொள்ளும்படியல்ல, ஊழியம் செய்ய"

*"மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக, தம்முடைய ஜீவனை கொடுக்கவும் வந்தார்." (மத்தேயு 20:28)*

ஆண்டவர் தமது வார்த்தையை கேட்பவர்களிடம் தமக்கும் மற்ற மகாராஜாக்களுக்கும் உள்ள வித்தியாசத்தை பதிய வைத்துக் கொண்டிருந்தார். வேதாகம தீர்க்கதரிசன நிறைவேறுதலில் இஸ்ரயேலின் ராஜாவாயிருக்கும்படி அவர் வந்திருந்தார். அவர் உலக ராஜாக்களை போலல்லாமல், ஜனங்களிடம் எவ்வளவு பெறலாம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பாமல் ஜனங்களுக்கு எவ்வளவு செய்யலாம் என்று அறிய விரும்பினார். அவர் சுய நலமுள்ளவராக இருக்கவில்லை. அவர் மற்றவர்களிடமிருந்து எவ்வளவு அதிகமாக ஊழியம் பெறலாம் என்றும் மற்றவர்களுக்கு எவ்வளவு குறைவாக ஊழியம் செய்யலாம் என்றும் முயற்சி செய்யாமல், மாறாக, மற்றவர்களுக்கு எவ்வளவு அதிகமாக ஊழியம் செய்யலாம் என்றும், மற்றவர்களிடமிருந்து எவ்வளவு குறைவாக ஊழியம் பெறலாம் என்றும் முயற்சித்தார். தமது சீஷர்களும் இதையே செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவரும் அவரது சீஷர்களும் பரம அழைப்புக்கு, பரலோக ராஜ்யத்திற்கு என்று அழைக்கப்பட்டார்கள்; சுயநலமாக இருக்கவோ அல்லது தங்கள் சொந்த மனநிறைவுக்காக கனத்தை பெற்றுக் கொள்ளும்படியோ அழைக்கப்படவில்லை அவர்கள் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டார்கள். அதுவும் விசேஷமாக தேவனுடைய பிள்ளைகளின் ஊழியத்திற்காக அழைக்கப்படுகிறார்கள். ஊழியம் பண்ணுகிற ஊழியக்காரனுக்கு இதுவே சரியான பொருள்.

கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களாயிருக்கிற நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவே அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைப்பதே சரியானதாக இருக்கும். ஆவிக்குரிய காரியங்களில் ஊழியம் செய்கிறவர்கள், "ஊழியர்" என்ற பெயரில் விசேஷமாக அறியப்பட்டவர்கள், தாங்கள் ஊழியத்திற்கு என்று இருக்கிற அலுவலகம் என்றும், தங்களுக்கு அல்ல, பிறருக்கு ஊழியம் பண்ணுவதற்காக என்பதை மனதில் கொள்ள வேண்டும். இப்படி ஊழியம் பண்ணவே தங்களது ஜீவனை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதையும் மனதில் வைக்கவேண்டும். யோர்தானில் இயேசு ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன் அவரது வாழ்க்கை குறித்து வேத வாக்கியங்கள் மிகக் குறைவாகவே கூறுகிறது. அவர் தமது ஜீவனை மற்வர்களுக்காக – அவரது நண்பர்களுக்காகவும், விரோதிகளுக்காகவும் – ஜீவனை கொடுத்தபோது; மூன்றரை சத்திய ஊழிய வருட காலப்பகுதி அதிக கவனத்தை ஈர்த்தது.

அவரது சீஷர்கள் அனைவருக்கும் இது உண்மையாக இருக்கிறது. நமது ஊழியம் நமது அர்ப்பணத்தில் ஆரம்பிக்கிறது. கர்த்தர் நமக்கு குறிப்பாக சொன்னதுபோல, நாம் பாதையில் நுழையும் வரை, நாம் ஊழியம் செய்யவோ, பரிசுத்த காரியங்களில் கிரியை நடப்பிக்கவோ நமக்கு அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. எனினும் தற்போது நாம் ஊழியம் செய்ய ஆரம்பிக்கும் முன் முப்பது வயதை அடையும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதையும் நாம் நமது ஜீவனை, கர்த்தருக்கும், அவரது சத்தியத்திற்கும் சகோதரர்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் தெளிவாக புரிந்து கொண்டு கொஞ்சம் முந்திய வயதிலேயே நாம் அர்ப்பணம் செய்யலாம். ஏனெனில் நாம் நியாயப் பிரமாணத்திற்கு கீழாக இல்லை. (ரோமர் 3:19)

### மனுஷகுமாரன் மட்டுமே மனிதனுடைய மீட்கும்பொருளாக ஊழியம் செய்ய முடியும்

நமது கர்த்தர் தம்மை மனுஷகுமாரன் என்றும், தான் "ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும்" வந்ததாகவும் கூறுகிறார். உண்மையிலேயே அவர் தேவகுமாரனாக இருந்தார். பூரண மனிதனாகிய ஆதாம் பாவத்தில் விழுவதற்கு முன்பு, அவர் ஒரு தேவ குமாரனாக இருந்தார். நமது கர்த்தர் தம்மை மனுஷகுமாரன் என்று கூறிக் கொள்வது, தாம் இனி ஆவியின் நிலையில் இல்லை என்பதையும் மனித நிலையில் இருப்பதை முக்கியப்படுத்தி கூறினார். அவர் பூமிக்கு வந்தது ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக, அவர் கூறியது போல ஊழியம் பண்ண, சேவை செய்ய, மனிதருக்கு தேவைப்படும் சேவையை அவர் ஆவியின் ஜீவியாக இருந்து கொண்டு அவரால் செய்திருக்க முடியாது. மனுக்குலத்திற்கு மீட்கும் பொருளைக் கொடுக்க அவர் மனிதனாக வேண்டியது தேவையாக இருந்தது. அவர் மனிதனாகித் தான் மனிதருக்கான மீட்கும் பொருளை கொடுக்க முடியும். பரிபூரணனை ஆதாமுக்கும் அவனால் ஜீவனை இழந்த மனுக்குலத்திற்கும் ஜீவனை விலைக்கிரயமாக வழங்குவதை அவர் பூரண மனிதனாகித்தான் செய்ய முடியும்.

"கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், மனித ஜீவனுக்கு மனித ஜீவன்" என்பது தெய்வீக பிரமாணத்தின் தேவையாக இருந்தது. ஆதாம் பாவம் செய்திருந்தான். அவன் சரீர பிரகாரமாக, மனதின் பிரகாரமாக ஒழுக்கத்தின் பிரகாரமாக புதுப்பிக்கப்படுவதற்கு முன்பாக மீட்கப்படவேண்டும் அல்லது அவன் தேவ கிருபைக்கு திரும்ப வேண்டும். இந்த முழு புதுப்பித்தலை சாத்தியமாக்குவதற்காக இயேசு வந்திருந்தார். மற்றவர்களது சேவைக்காக அவருடைய ஜீவன் அர்ப்பணிக்கப்பட்டது. இந்த மகா சேவையை அவரது சிலுவை மரணத்தில் நிறைவேற்றினார். அவரது அடிச்சுவட்டை

பின்பற்றுகிறவர்களாகிய நமக்கு தமது பூமிக்குரிய வாழ்க்கை முழுவதும் சரியான வாழ்க்கைக்கான உயர்ந்த முன்மாதிரியை கொடுத்தார்.

### நமது சேவை குறிப்பாக புதுசிருஷ்டிக்காகவே

அநேகர் வேதாகமத்தை தவறாக புரிந்துகொண்டு, உலகத்தை மீட்பதற்கு இதுதான் நேரம் என்று நினைக்கிறார்கள். ஆகையால் அவர்கள் மனுக்குலத்தை உயர்த்தவும் ஆறுதல்படுத்தவும் தங்கள் நேரம் முழுவதையும் செலவழிக்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே பாராட்டத்தக்க முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஏனெனில் ஒவ்வொரு நல்ல வேலையும் முயற்சியும் பாராட்டப்பட வேண்டும், தெய்வீக திட்டத்தைப்பற்றி சரியாக கூறுவது, தற்போது செய்யப்படவேண்டிய பெரிய வேலை. இந்த யுகத்தில் தேவனுடைய வேலை, உலகத்தை சீர்திருத்துவது அல்ல, ஆனால் புது சிருஷ்டியை அபிவிருத்தி செய்வது ஆகும். இந்த வேலை இன்னும் முடிவடையவில்லை. நாம் தேவனுடைய வேலையை செய்வோமானால், அது புது சிருஷ்டியைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். அப்போஸ்தலர் கூறுவது போல, நமக்குக் கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக் கடவோம்.

இந்த ஊழிய வேலையில் இயேசு இருந்தார். அப்பொழுது புது சிருஷ்டி இல்லாதிருந்தாலும், அவர் மாம்சத்தில் இருந்தபோது, புது சிருஷ்டியை உருவாக்குவது அவரது வேலையாக இருந்தது. அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றுகிற சிலரை கூட்டிச்சேர்ப்பதே அவரது வேலையாக இருந்தது. அவர்களுக்காகவும் உலகத்திற்காகவும் தமது ஜீவனை கொடுப்பது அவரது வேலையாக இருந்தது.

இயேசு தமது ராஜ்யத்தில் சிங்காசனத்தில் உட்காரும் பொழுது அவரது சீஷர்களில் இரண்டு பேர், ஒருவர் அவரது வலது பக்கத்திலும் ஒருவர் இடது பக்கத்திலும் உட்கார விரும்பியதை இந்த சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்கிறோம். இந்த விருப்பத்திற்காக அவர்களை அவர் கண்டிக்கவில்லை. ஆனால் அதைப் பெறுவது எவ்வளவு கஷ்டம் என்பதையும் தாம் பானம் பண்ணும் பாத்திரத்தில் அவர்கள் பானம் பண்ணக் கூடுமா என்று கேட்டார். அவர்கள் "கூடும்" என்றார்கள். அதை விரும்பினார்கள். அவர்களது பதில் அவருக்கு சந்தோஷமாக இருந்தது அவரது வார்த்தையிலிருந்து வெளிப்பட்டது. "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் பெறுவீர்கள்." அவரது ராஜ்யத்தில் அவரது அருகில் தங்களுக்கு இடத்தைக் கேட்டார்கள். அப்படிப்பட்ட இடத்தை அருளுவது தமது சித்தமல்ல என்றார். தமது கிருபையின்படி அல்ல, நீதியின்படி அது கொடுக்கப்படும். இவைகளை பிதாவானவரே வழங்குவார்.

### தேவையான நிபந்தனைகளை நாம் சந்திக்கிறோமோ?

ராஜ்யத்தில் நாம் எந்த இடத்தை பெறுகிறோம் என்பது நாம் ஊழியனாகவோ, சேவை செய்கிறவனாகவோ ஆவதைப் பொறுத்தே இருக்கிறது. மற்றவர்களிடமிருந்து முடிந்த அளவுக்கு நாம் அதிகமாக பெறவும், முடிந்த அளவுக்கு நாம் மற்றவர்களுக்கு குறைவாக கொடுக்கிறவர்களாக இருந்தால், கர்த்தர் தமது ராஜ்யத்தில் ஆளுகை செய்வதற்கு இப்படிப்பட்டவர்களை தேடவில்லை. இப்படியிருந்தால் நாம் ராஜ்யத்திலே இடம்பெற மாட்டோம். அவர் மிகவும் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரை தேடிக் கொண்டிருக்கிறார். இந்த வகுப்பினர் அனைவரும் ஊழியர்களாக சேவை செய்வதில் சந்தோஷப்படுகிறவர்களாக, சகோதரர்களுக்கான ஊழியத்தில் தங்களது திறமைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு தமது ஜீவனை கொடுப்பதை பெரிய சலுகையாக கருதுகிறவர்களாக இருப்பார்கள். ஏனெனில் சகோதரர்களுக்கு ஊழியம் பண்ணுவது தேவனுக்கு ஊழியம் பண்ணுவதாக இருக்கிறது. அவரிடத்தில் அர்ப்பணத்தில் தங்களை ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவரிடம் தங்களது ஜீவனை அர்ப்பணிக்க வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்கள்.

## R5786 Profitless and Profitable Service

## பிரயோஜனமான மற்றும் பிரயோஜனமற்ற ஊழியம்

*"எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை." 1 கொரி 13:3*

அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியின் வரங்களை ஆராய்ந்து பேசுகிறார். 12வது அதிகாரத்தில், சுவிசேஷ செய்தியைக் கேட்டு கிறிஸ்துவின் சீஷர்களான ஆதிகால சபையிலுள்ள ஒவ்வொருவருக்கும் அதிசயத்தக்க வரங்களை கர்த்தர் கொடுத்தார் என்று காண்பித்திருக்கிறார். இந்த வரங்கள் இரண்டு காரணத்திற்காக கொடுக்கப்பட்டன. அதைப்பெற்றுக் கொண்டவரின் பிரயோஜனத்திற்கும், மேலும் வெளியாட்களுக்கு சாட்சியம் கூறவும் ஆகும். சுவிசேஷ செய்தி புதிதாக இருந்தது. குழந்தையான சபையை ஆரம்பிக்க, சில நன்மை பயக்கக்கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ள தக்கதான முறைகள் தேவைப்பட்டன. இந்த பல்வேறு வரங்களை குறிப்பிட்ட பிறகு பொதுவான பிரசங்கத்தின் வரம் மிகவும் மதிப்புடையதாக இருந்தது என்று கூறுகிறார். பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்." ஆவியின் கனிகள் மிகவும் முக்கியமானது என்று அவர்களுக்கு நிச்சயப்படுத்துகிறார். அன்பு என்பது மிகவும் முக்கியமான கனி என்றும், அது இல்லாமல் அனைத்து வரங்களும், அனைத்து வைராக்கியங்களும் மதிப்பற்றது என்றும் கூறுகிறார்.

ஆதிகால சபையில் இருந்த வரங்கள் நமது கால சபையில் இல்லையே என்று மிகவும் வருத்தப்படக்கூடிய கிறிஸ்தவர்கள் இன்றைய நாளில் இருக்கிறார்கள். இந்த ஆவியின் வரங்கள் தற்போது இல்லாததற்கு காரணம் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் விசுவாசமும் உண்மைத்தன்மையும் இல்லாததே என்று உறுதியாக அவர்கள் உணருகிறார்கள். இந்த வரங்களெல்லாம் ஒழிந்து போகுமென்று அப்போஸ்தலர் பவுல் சபைக்கு உறுதிபடக் கூறுவதை இவர்கள் கவனிக்கவில்லை என்று தெரிகிறது. அவர் சொல்வதைக் கேளுங்கள்: "அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் (புரிந்து கொள்ளக்கூடிய திறமை) ஒழிந்துபோம்......

……………இப்பொழுது விசுவாசமும், நம்பிக்கை அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது." 1 கொரி 13:8,13) இந்த அதிசயிக்கத்தக்க வரங்கள் படிப்படியாக ஒழிந்துபோயின என்பதை நாம் காண்கிறோம். இந்த அப்போஸ்தலர்கள் மற்றும் அப்போஸ்தலர்கள் யாருக்கு கைகளை வைத்து இந்த வரங்களை கொடுத்தார்களோ அவர்களும் மரித்த பிறகு, இந்த வரங்களை யாரும் பெற முடிய வில்லை. எனினும் இந்த வரங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரங்களை பெற்றிருந்தால், பரலோக இராஜ்யத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு அடையாளமல்ல. அந்த காலக் கட்டத்தில் இவைகளில் சில வரங்களை பெற்றிருந்த ஒருவர் கைவிடப்படக்கூடும்.

எந்த அளவுக்கு, விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பை ஒரு கிறிஸ்தவன் அபிவிருத்தி செய்கிறானோ, அந்த அளவுக்கு நித்தியத்தை வளர்க்கிறான். இவை மூன்றில் அன்பானது முதலாவது நிற்கிறது. முக்கியமான ஒரு உணர்வில் விசுவாசம் தோல்வியடையும்; முக்கியமான ஒரு உணர்வில் நம்பிக்கையும் ஒழிந்து போகும். ஏனெனில் பூரணமானது வரும்போது, முழுமையாக கிடைத்தபிறகு நம்பிக்கை முழுமையாக போய்விடும். நமக்கு நம்பிக்கை தேவைப்படாது. பரிசுத்த பவுல் கூறுவது போல, "ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன**?** வரக்கூடிய மகிமைக்காக நாம் எதிர்பார்த்துக்கொண்டிருப்போமானால் அதில் நாம் தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருப்போம். நாம் கர்த்தரிடத்திலும், அவரது நற்குணத்திலும், உண்மைத்தன்மையிலும் உள்ள நம்பிக்கையை எப்பொழுதும் இழக்காதிருக்க நாம் விசுவாசத்தை அப்பியாசப்படுத்துவோம். ஆனால் இந்த அர்த்தத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் தேவைப்படாது. எனினும் அன்பானது எந்தவிதத்திலும், எந்த அளவிலும் அழியாது, ஆனால் அது விரிவடைந்து ஆழமாகும். "அன்பு ஒருக்காலும் ஒழியாது." இது ஒரு தேவனுடைய குணமாகும். ஒவ்வொரு பரிபூரண ஜீவியும் இந்த மகிமையான குணத்தினால் உருக்கொண்டிருக்கும். தெய்வீக சுபாவத்தை பெற்றிருப்பவர்கள் இந்த குணத்தை முழுமையாக உயர்ந்த நிலையில் அடைந்திருப்பார்கள்.

ஆவியின் வரங்களுக்கும், கனிகளுக்கும் இடையிலுள்ள இந்த வித்தியாசத்தில் தொடர்புடையவைகளில் நாம் கவனிக்கிற வேத வாக்கியத்தில் இந்த மொழியை அப்போஸ்தலர் பயன்படுத்துகிறார். அன்பில்லாமல் எப்படி தனக்கு உண்டான யாவற்றையும் ஏழைகளுக்கு அன்னதானம் பண்ணுவார்கள்**?** அப்போஸ்தலர் கூறுவது போல, அப்படிச் செய்வதில் குறைவான முக்கியத்துவம் நோக்கமாக இருக்கும் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அங்கே அன்பு இல்லையென்றால் அதில் பலன் ஏதுமில்லை. அதிக அன்பு இருந்தால், பலன் அதிகமாக கிடைக்கும். குறைவான அன்பு இருந்தால் குறைவான பலன் கிடைக்கும். ஏழைகளுக்கு கொடுக்கும் பெரும்பாலானவர்களுக்கு கொஞ்சம் அன்பு இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். தற்காலத்தில் செய்யப்படும் நற்காரியங்கள் அன்பினால் செய்யப்படுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். எந்த அளவுக்கு ஒருவர் தருமம் செய்தாலும் அது அவருக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். வீண் கர்வத்தினாலும் சுயநலத்தினாலும் ஒருவர் தருமம் செய்வாரானால் அது ஆசீர்வாதத்தை கொண்டு வராது. இது சபைக்காக இருந்தாலும் அல்லது உலகத்திற்காக இருந்தாலும் உண்மையாயிருக்கிறது.

ஏழைகளுக்கு அன்னதானம் பண்ண தன்னுடையவைகளைக் கொடுத்தல் சுயநல முன்னேற்றத்திற்காகவோ அல்லது பிரபலமடையும் நோக்கத்துடனோ இருக்கலாம். பரிசேயர்கள் தங்களது பரிசுத்தத்தை ஒரு சாட்சியாக ஆக்கினார்கள். ஆனால் அவர்களது இந்த செயல்பாடுகளில் அன்பு முக்கியத்துவம் பெறவில்லை. அதன் பலனாகிய மனிதர்களின் புகழ்ச்சியை அவர்கள் அடைந்தார்கள் என்று நமது ஆண்டவர் கூறினார். ஒரு அரசியல்வாதி தன்னுடையவைகளைக் கொண்டு அன்னதானம் பண்ணினால், அதற்காக அவர்கள் தேர்தலில் அவனுக்கு ஓட்டு போட்டதின் மூலம் அதன் பலனை அவன் பெறுவான். அவனுக்கு இரண்டுவிதமான பரிசுகள் எதற்கு**?** ஆனால் அவனது ஓட்டுகளே அவனது அன்னதானம் பண்ணனதின் நோக்கமாகும். ஆனால் கர்த்தர் கொடுக்கும் பரிசு தற்காலத்திற்கும் வரும்காலத்திற்குமாக இருக்கிறது.

தனியார் தர்ம ஸ்தாபனங்களுக்கு பொது பொருட்களும், தனிப்பட்ட அன்பளிப்புகளும் அதிக அளவில் கொடுக்கப்படுகின்றன. நாம் ஆவியில் பசிதாக முள்ளவர்களுக்கு, உணவையும், ஆவியில் நிர்வாணிகளுக்கு வஸ்திரங்களையும் கொடுக்கலாம். ஆகையால் நாம் நமது பணத்தையும் செலவு செய்து நமது பொருட்களையும் கொடுத்து முடிந்த அளவுக்கு மேன்மையான வழியில் ஏழைகளுக்கு கொடுக்கலாம். எனினும் சரீரத்துக்கான உணவும் உடையும் தேவைப்படும் போது புறக்கணிக்கப்படகூடாது. ஆனால் ஆவிக்குரிய உணவும், வஸ்திரமும், அவனுக்கும் அவனுடையவர்களுக்கும் மற்ற எல்லா மனிதர்களுக்கும் உண்மையான அன்புடன் நாம் கொடுக்கவில்லை என்றால் கர்த்தருக்கு அது ஏற்புடையதாக இருக்காது. எந்த அளவுக்கு ஒரு கிறிஸ்தவன் கர்த்தரினிமித்தம் வெளியரங்கமாக மனுஷர் காணவேண்டும் என்று கொடுத்தாலோ அல்லது இதை செய்யும்படி மற்றவர்கள் எதிர்பார்ப்பார்கள் என்று நினைத்து செய்தாலோ அல்லது வேறு எந்த நோக்கத்தில் செய்தாலோ, அந்த அளவுக்கு வெகுமானம் பெறமாட்டார்கள். அது அன்பினிமித்தம் செய்யப்பட்டால் பரலோகத்தில் வெகுமானம் கிடைக்கும். இராஜ்யத்திற்கான குணலட்சண அபிவிருத்தியிலும் பிரயோஜனமாக இருக்கும்.

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ, **C.T.** ரசல் அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:

சகோ, **R.** செல்வராஜ். சென்னை வேதமாணவர் சபை.

எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.

சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**